KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

Vol 2.] 1929 ஞு ஜூலை மீ 18உ [No. 28.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 541
2. அப்பர். E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 543
3. கலைத்திறம் நுனிக்கும் கலைஞன் (Oscar Wilde) K. இராஜகோபாலன் 545
4. மாறன் பாப் பாவினம் (பரிபாடல்) 547
5. சிலப்பதிகாரமும் மணிமேகலையும். P. இராமானுஜன் 548
6. தமிழ்ப் பாடம் (திருவேங்கடமாலை) 550
7. குலசேகரர் (நடமாடுங்கோயில்) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 552
8. கம்பராமாயணம் (வரைக்காட்சிப் படலம்) T. N. சேஷாசலம் B. A, B. L. 555
9 வர்த்தமானம் 559

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாவலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினாங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது.
மானேஜர்.

கலா நிலயம்

189063

கல்சரின் அவசியம்.

III

சென்றநாள் செப்பியபடி எந்திரங்களினிடம் நாம் வைத்திருக்கும் நம்பிக்கையே நம்மை அந்தத்தில் துரோகம் செய்துவிடப் போகின்றது. எந்திரம் என்று நாம் இங்கு உரைப்பது நெசவு முதலிய தொழில்களுக்கு உரிய கருவிகளைமாத்திரம் கருத்திற் கொண்டன்று. ஏதேனுமொன்றைப் பெறுவதற்கேனும் செய்து அமைப்பதற்கேனும் கருவியாய் அமைகின்ற யாவும் 'எந்திரம்' என்னுமச் சொல்லில் அடங்கும். விடுதலை, சுதந்திரம் என்னுமிவை எந்திரமன்றி வேறு என்ன! ஜனத்தொகை, சுகாதாரம் முதலியவைகளும் இந்தக் கருத்தில் எந்திரங்களே. மதச் சங்கங்கள், பொதுஸ்தாபனங்கள், அரசாங்கங்கள் அனையவைகளும் எந்திரங்கள்தாம். செல்வமும் ஒரு எந்திரமே. இவைகளில் நாம் நம்பிக்கை வைப்பது ஆபத்திற்கிடமானதென்றுரைப்பது அவை தம்வரையில் தீங்கையே செய்யுமெனுங் கருத்தினாலன்று. நாம் நம்பிக்கை வைக்குந் தன்மையிற்றான் ஆபத்து நேர்வதற்கு இடம் ஏற்படுகின்றது. இவைகளால் நாம் நற்பயன் பெற வேண்டுமாயின் அவைகளை எந்திரங்கள்தாம் என்று அறிந்து எந்திரங்களாகவே கையாளல் முறையாகுந் தாமோ, வேறொன்றிற்குக் கருவியேயிவை என்னும் உணர்வைப் போக்கினராய் மேனாட்டோர் முறைக்கிணங்கிக் கருவிகளையே செம்மைசேர் சீர்மையெனத் தீர்ந்துவிடுகின்றோம். கருமமின்னதென்று தெரியாமலே கருவிகளைப் பாராட்டுகின்றோம். கருமத்தின் நோக்கம் சிறிதிருப்பினும் அதற்கு அநாவசியமான அளவு கருவிகளைப் பெருக்குகின்றோம். எல்லோருமிப்பொழுது இத்தகைய எந்திரங்களை யமைப்பதுவே முடிவான கருமம் என்று விவகரிக்கின்றனர். சிற்சிலர் வாயிலே வருகின்ற சொற்கள் அக்கருவிகளுக்கு மேம்பட்ட ஒரு நோக்கத்தை உடையனபோல் தோன்றலாம். ஆயினும் அவை பெரும்பான்மை வெற்றுரை என்பது அவர் செய்யுங் காரியங்களை நுணுகி ஆராய்ந்தால் தெரியவரும். நாட்டிலுள்ள வறியோர்தம் துயர்நீங்க வியாபாரமும் கைத்தொழிலும் வளரவேண்டுமென்பர். இவ்வளர்ச்சிக்கு இடையூறு செய்கின்றவோர் அந்நிய அரசாட்சியின் சட்டங்கள் செல்லாதபடி அரசியல் அமையவேண்டுமென்பர். இப்படிச் சொல்லும்போது வர்த்தகம் கைத்தொழில் அரசியல் முதலியன, மேலானவோர் நோக்கம் நிறைவேறுவதற்குக் கருவிகளாய்க் கருதப்படுவன போன்றே தோன்றுகின்றன. ஆயினும் அவ்வாறு

உரைத்து உரைத்ததை ஊக்கமொடு முயல்கின்றவர்களின் பெரும்பகுதியோருடைய செயல்களை உற்றுப் பார்த்தால் இம்மாறுபட்ட மனத்தின் விபரீதங்கள் பல காணலாம். சங்கங்கள் சேர்வர்; கட்சிகள் அமைப்பர்; மகாநாடுகள் கூடுவார். பத்திரிகைகள் நடத்துவார். இந்த எந்திரங்களை ஓட்டுவதற்குப் பணவுதவியும் சிற்சிலசமயம் செல்வவந்தர்களாயிருப்பவர் செய்வர். அந்நியநாட்டிற்குச் சென்று சட்டியும் செங்கலும் தோலும் துணியும் செய்வதற்குரிய புதிய முறைகளைக் கற்றுக்கொண்டு வருவதற்குச் சில இளைஞர்களை அனுப்புவார். அவர் கற்றுவந்து இங்குத் தொழிற்சாலைகள் அமைத்து, அதன்மூலமாய் இந்தியாவின் பணம் வெளிநாடுகளுக்குப் போகாமல் தடுத்துத் தொழிலாளிகளுக்கு வேலை கிடைப்பதற்கொத்த வசதியும் ஏற்படுத்தி, வறுமையின் கொடுமையை விலக்குவதற்கான முயற்சி இவை என்று சொல்கின்ற வரையில் நோக்கத்திற்கேற்ற கருமமும் கைப்பொருள் செலவும் செய்வதாகக் காணப்படலாம். எனினும், இவ்வெந்திரங்களை அமைப்பதும், அதை நடத்துவதும், அமைத்து நடத்துவதில் போட்டிகொண்டு தோல்வி வெற்றிகளைக் கணக்கிடுவதும் ஆகிய இத்தகையவைகளே அன்னவர் சிந்தனையில் செறிந்திருக்கும்; இவைகளால் நீங்கவேண்டிய வறுமையைப் பற்றிய நினைவு, உண்டோ இல்லையோ என்னும்படி அவர் எண்ணங்களுக்கப்பால் வெகுதூரத்தில் விலகிநிற்கின்றதாகின்றது. அற்றன்றெனின், மற்றவர் வறுமைக்கே முற்றிலும் இரங்குபவர் இவராயின், இவ் வெந்திரங்களின்மூலமாய்ச் சுற்றிச்சுற்றிவந்து செய்கின்ற உதவி ஒருபுறமிருக்கத் தாமே நேராகத் தம் கைப்பொரு ளனைத்தையு மல்லாவிடினும், இயன்றவளவு, நாடோறும் 'கிளப்புகளில்' செய்யும் வீண்செலவில் ஒருசிறு பகுதியையேனும், எடுத்துக் கொடுத்து வறியவருற்ற மிடியைத் தீர்க்கத்தான் தலைப்படமாட்டாரோ. நாம் முன்சொன்ன எந்திர முறைகளில் ஈடுபட்டிருக்கும் எண்ணிறந்த செல்வவந்தர்கள் எத்தனைபேர் இதனைச் செய்பலாகின்றனரென்று கணக்கெண்ண நம் ஒரு கையில் இருக்கின்ற விரல்களே மிகை. இவ்வாறு சொல்வதால், இன்னவர் அனைவரும் தாம் இந்தியாவின் வறுமையை நீக்குவதற்குப் பலவழிகளில் பாடுபடுவதாக விளம்புவதனைத்தும் மோசவார்த்தைகளே என்றும், இந்தமோசத்தால் ஏதோ சுயலாபம் கருதுகின்றனரென்றும் நாம் மதிப்பதாகக் கொள்ளவேண்டா. மோசக்கருத்துடன் இப்படி விவகரிப்பவர் சிற்சிலரே. ஏனையோர் எந்திரத்தால் மோசம் செய்யப்பட்டிருப்பவர்; அவரே வஞ்சக ரல்லர்.

ஒருவருக்கு மோட்டார் ஓட்டி ஒருவன் வேண்டியிருக்கின்றதென்று வைத்துக்கொள்வோம். ஒருவன் வருகிறான், "உனக்கு என்ன சம்பளம் வேண்டு" மென்று கேட்கின்றார். ஐம்பதுரூபாய் வேண்டுமென்கின்றான் அவன். "ஐம்பது ரூபாய் அதிகம்; முப்பத்தைந்தே தருவேன். காலையில் ஆறு மணிக்கு வரவேண்டும். இரவில் நான் 'கிளப்பி'லிருந்து வருவதற்கு நேரமாகின்றதென்று முணுமுணுக்கப்படாது. நாள் தவறாமல் வரவேண்டும்; உனக்குத் தலைவலியென்றும், பிள்ளைக்கு நோயென்றும், மனைவிக்குச் சுகமில்லை யென்றும் சொன்னால் கேட்கமாட்டேன். ஒருநாள் நின்றால் மூன்றுநாள் சம்பளம் போயிற்று. சம்மதமானாற் சொல். நீ இல்லாமற்போனால் ஆயிரம் பேர்" என்று சொல்லிச் சம்பளத்தைக் குறைக்கவும் நிபந்தனைகளைப் பெருக்கவும் பார்ப்பதே தக்கது என்று அச்செல்வவந்தர்தம் மனத்தில் இயற்கையாகத் தோன்றுகின்றது. இப்படிக்கின்றி, "அப்பா, நீ எத்தனைபேருக்கு உணவும் உடையும் கொடுத்துக் காப்பாற்ற வேண்டியவனாயிருக்கின்றாய்? மக்கள் எத்தனை? பெற்றோர் உளரோ! வேறுயாரேனும் உன் ஆதரவில் இருக்கின்றனரோ?" என்று விசாரித்து, அவன் மனைவியும், குழந்தைகள் அறுவரும், பெற்றோர் இருவரும், தங்கைமார் மூவரும் அடங்கிய வொரு குடும்பத்தைத் தன் வருவாயைக் கொண்டு நடத்தவேண்டியவனா யிருக்கின்றான் என்பது தெரிந்துகொண்டு, "ஆயின் ஐம்பது ரூபாய் போதாது; எழுபத்தைந்து தருகின்றேன்" என்று அளிக்கவேண்டுமெனும் எண்ணம் நேர்கின்ற புதுமையைக் காண்பது அரிது. இவருக்கோ கிளப்பென்றும் கூத்தென்றும் ஆகின்ற ஒரு நாள்செலவு குடும்பமொன்றை ஒருமாதம்காப்பாற்றக் கூடியதாயிருக்கும். எனினும் அத்தனி ஏழையின் வறுமையினளவைக் குறைக்கவேண்டும் என்னும் சிந்தனை உதித்திடாத இவரே, அடுத்த நிமிஷம் தேச முன்னேற்றத்தின்பொருட்டு உழைக்கின்ற ஒரு பத்திரிகைக்கு ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுப்பார். ஏனெனில் அது எந்திரம். மகாநாட்டின் செலவிற் பாதி தான் ஏற்றுக்கொள்வார்; ஏனெனில் அது எந்திரம். இன்னபடி எந்திரவாசனை தரக்கூடிய விஷயங்களுக்கெல்லாம் உதவிசெய்ய உண்மையாக முன்வருபவராவர். கலியாணத்திற்கும், கோவில் கட்டவென்றும் செய்கின்ற யாசகங்களுக்குங் கொடுப்பார்—ஏனெனில் தானதருமம் என்பது எந்திரமுறைக்குள் அடங்கியிருக்கின்றது. பிச்சைக்காரர்களுக்குஏற்பாடு செய்ய ஒரு ஸ்தாபனம் இருந்தால், அது எந்திரச் சாயல் பெற்றுவிட்ட தாகையால், அதற்குப் பொருளுதவி செய்வார். மற்றுத் தன்னிடம் வேலைதேடி வருபவனே எப்பொழுதும் அதிகச் சம்பளம் கேட்பதாகவே அவர் கருத்தில் தென்படும். "உன்வறுமையைநீக்க ரூபாய் ஐம்பதுபோதாது, எழுபத்தைந்து எடுத்துக்கொள்" என்பதில் எந்திரசகாயம் ஒன்றும் இல்லையாகையால், அந்த வார்த்தை வாயில் வருவதற்கு வழியில்லாமற் போகின்றது. தேயத்தின் வறுமையைத் தீர்ப்பதே அவர் நெருங்கிய நோக்கமாயின் இந்தியாவில் இருக்கும் இவ்வளவு கோடி ஏழைகளில் ஒருவனது வறுமையையாகிலும் தடுப்பதற்கு வாய்த்த இச்செவ்வியை வாளா விட்டிருக்கமாட்டார். மற்று, மோட்டார் ஓட்டுகின்றவர்கள் தம்முடைய "முன்னேற்ற"த்திற்காக ஒரு சங்கம் கூடுவார்களாயின் அப்பொழுது இவரே அச்சங்கத்தின் போஷகராகவும் தலைவராகவும் முன்வருவதைக் காணலாம். கமிட்டிகள் ஏற்படுத்தித் தருவார். மூலதனம் தானும் அளித்துப் பிறரிடமும் வாங்கித்தருவார். "தினத்திற்கு ஆறு மணி நேரத்திற்குமேல் வேலை செய்யமாட்டோம். அறுபது ரூபாய்க்குக் குறைந்த சம்பளத்திற்கு ஒருவனும் அமரக்கூடாது. அப்படி யாராவது அமர்ந்தானால்…………" என்று இன்னபல நிபந்தனைகள் அமைத்துத் தருபவர் அவரேயாகி யிருப்பார்.

ஏனெனில், இப்பொழுது இது எந்திரமாய்விட்டது; ஆகையால் விஷயம் வேறு.

இன்னபல நிகழ்ச்சிகளை ஆழ்ந்து உன்னுவோர்க்கு, மனிதர் இக்காலம் முடிவாய நோக்கத்தைக் கைவிட்டு எந்திரங்களையே கும்பிட்டு விவகரிப்பதன் உண்மை எளிதிற் புலப்படும். இத்தகைய நிலையில் நமக்குக் கல்சர் செய்யவல்ல உதவி சொல்லுந் தரமன்று. வறுமையென்றும் செல்வமென்றும் விடுதலையென்றும், அடிமையென்றும், சுகம் என்றும் துக்கமென்றும், மேன்மை என்றும் தாழ்மையென்றும், ஆரோக்கியம் என்றும் நோய்நிலை என்றும், சுதந்திரம் என்றும் கட்டுப்பாடென்றும், இவ்விதம் உலகவிவகாரங்களை வேறுவேறாகப் பிரித்துப் பார்க்கின்ற தன்மை கல்சருக்கு இல்லை. பகுத்தறிவு மனோபாவம் என்னும் அதன் இருகண்களும் சீர்பெற்ற செம்மை என்னும் ஒன்றையே நோக்கியிருக்கும். செம்மையைக் காணுமிடத்துக் கடவுளின் கருத்து அங்கு நடைபெறவில்லை என்பதை ஓர்ந்து கொள்ளும். இருப்பு எந்திரமேனும், ஸ்தாபன எந்திரங்களேனும் எப்பொழுதேனும் எதனையேனும் செம்மைசெய்து வைத்துளதோ! இல்லையே! இது பிரசித்தம். ஆயினும் கல்சரிலாதார், எந்திர அமைப்பின் பிழையென்றும் அதனை ஓட்டுவோர் பிழையென்றுங் கருதி மேன்மேலும் அதன்மேல் விழுந்து எந்திரத்தைச் செப்பனிட முயன்று தாமே சிக்கிக்கொள்வதுமல்லாமல் மற்றவர்களையும் சிக்கவைத்து விடுகின்றனர். எந்திரத்தின் சக்கரம் மெள்ளமெள்ள அரைக்கத் தலைப்படும்போது அதன் பல் பட்டுக் 'குறுகுறு' என்பதால், திறக்கின்ற வாயைக் களிப்புமிகுதியால் வரும் சிரிப்பென்று எண்ணிக்கொள்வது மிகவும் பரிதாபகரமான நிலை. இவ்விதம் நமன்வாயில் களிக்கின்ற நம்மைச் சிதைவுறாமல் கைதந்து கரையேற்றவல்லது கல்சரென்னும் அத் தத்துவமன்றிப் பிறிதொன்று இலது. அவரவர் தன் இஷ்டப்படி சொல்வதற்கும்செய்வதற்கும் ஏற்றவோர்எந்திரத்தைச் சுயேச்சை என்று எண்ணி மகிழ்கின்றோம். தன்னுடையஇஷ்டப்படிசொல்லவும்செய்யவும் ஏற்பட்டுவிட்டால் சுயேச்சைஎன்னும்அவ்வாசை பூரணமாய் விட்டதென்று எண்ணுவதன் எளிமையை எடுத்துக் காட்டவல்லது கல்சர் ஒன்றே. தன் இஷ்டப்படி சொல்கின்றவனும் செய்கின்றவனும் அவ்வாறு சொல்லும்போதும் செய்யும்போதும், சொல்லத்தக்கவைகளையும் செய்யத்தக்கவைகளையும் மாத்திரம் சொன்னாலன்றிச் செய்தாலன்றிச் சீர்பெருகு செம்மையில் சிந்தனையை நாட்டியுள்ள கல்சர், சுயேச்சை பூரணமாயிற்றென்று மதித்துழல இடந்தராது. பச்சைக் குழந்தை என்ற தன்மை வயதளவால் மாத்திரம் ஏற்படுவதன்று. பச்சை மனிதர்களும் இருக்கின்றனர். இத்தகைய பச்சை மனிதன் தனித்தனியாகவும் சிற்சிலர் ஒன்று சேர்ந்தும் தமக்குரிய முறைகள் இவை என்று மனம்போன படியெல்லாம் விரும்பும்படி விடாமல் உண்மையிலே, அழகும் நன்மையும் தண்மையும் நேர்மையும் வாய்ந்தவைகளின்பால்உணர்வைச் செலுத்தி இப்பச்சைமனிதர் அவைகளை விரும்புமாறு ஆக்கிவைக்கின்ற தூயதோர்திறம் கல்சருக்கு உளது. மேனாடுகள் ஐசுவரியமுள்ள நாடுகளென்றும், நாமும் அவர்களோடு இச்செல்வத்தால் சரியாசனம் அமரவேண்டும் என்றும் சிலர், ஐசுவரியத்தில் அதனளவிலேயே சுகமுளதெனும் மனப்பால் மறவாப் பச்சைமனிதர் உரைக்கின்றனரே. நம்முடைய பெருமையும் நலங்களும் செல்வத்தினளவினால் சாதிக்கப்பெறும் என்று தம் உயிரையும் கருத்தையும் அதற்கே டகர்ந்திருக்கின்றவர்களைக் கல்சரானது நமக்குக் காட்டி, "ஐய, இந்தச் சனங்களைச் சிந்தித்துக்கொள்; அவர்தம் வாழ்க்கை நடக்கின்ற வழியைப் பார், அவர் வழக்கங்களை, நடவடிக்கைகளைப் பார். அவர் பேசுங் குரலைத்தான் கேள்; அவர் நிற்பதையும் நடப்பதையும் கவனித்துப்பார். அவர் படிக்கின்ற புத்தகங்களைக் கவனி. அவர்கள் களிக்கின்ற விஷயங்களை உற்றுப்பார்; அவர் வாய்நின்று வருகின்ற வார்த்தைகளைப் பார். அவர் மனத்தில் நிறைந்திருக்கின்ற எண்ணங்கள் எத்தகையன என்பதைக் கவனித்துப் பார்…………செல்வம் உடையவராயிருப்பதால் இப்படியெல்லாம் ஆகிவிட்ட இவரைப்போல் நீயுந்தான் ஆகவேண்டும் என்ற நிபந்தனையோடு எத்தனைப் பணந்தான் கொடுத்தாலும் ஏற்கவொண்ணுமோ" என்ற நினைவை யெழுப்பித்தரும். அப்பொழுது, செல்வமும் ஓர் எந்திரமேயன்றி அதுவே செயப்படுபொருள் ஆகாதென்பது தோன்றித்தோன்றி வளர்வதாகக் கருத்துமுற்றக் கடவுளின் சித்தத்திலே இணங்கித் தோய்ந்தவச் செம்மை நிலையை எய்துவோம். அஃதொன்று எய்தினாலன்றி உய்வதில்லை. மற்றவெலாம் அஞ்சுவதும், அஞ்சவருவதுமே யாகின்ற தல்லவோ!

(தொடரும்)

அப்பர்

5. அப்பர் கவித்திறம்.

1. கவிகளின் பகுதிகளும், அவற்றுள் அப்பர் உரிமையும்.

"ஆசு, மதுரம், சித்திரம், அகலம்
பாவகை பாடுவோன் கவியெனப் படுமே"

என்றார் இலக்கணவிளக்கத்தார். * சிலர் ஆசு கவிகளா யிருப்பினும், † மதுரகவிகளா யிரார். மதுரகவியென்னு மாழ்வார் ஒருவர் பாடிய பதிகம் ஒன்றே யாதலால் அவரை வேறுவகைக் கவியெனக் காட்டத்

* எழுத்துச் சொற்பொரு ளணியாப் பிவையின்
விழுத்தக வொருவன் விளம்பிய வுள்ளுறை
யப்பொழு துரைப்பது ஆசு கவியே
—இலக்கண விளக்கும். 764.

† சொல்லும் பொருளும் சுவைபட நிறீஇச்
செல்வழித் தொடையும் விகற்பமும் செறீஇ
யுள்ளத் துள்ளே கொள்ளு மமுதெனத்
தன்மை யுவமை பின்வரு பெற்றியி
னுருவ முதலுற் ரேசை பொலியப்
பாடுதன் மதுர கவியெனப் படுமே. —ஷை 765.

OFFICE OF THE REGIS… 3-…1929 MADRAS

தக்க ஆதரவுகள் கிடைக்கவில்லை. சம்பந்தரைப்போல் சித்திரகவியா யிருப்பவர்கள் ஆசுகவியாயும், மதுர கவியாயும், விஸ்தாரகவியாயும் விளங்குவது மிகவும் அரிது. ஏனெனில் ‡சித்திரகவி, ஆசுகவியாய்ப்பாடுதல் காளமேகம் போன்றவர்களுக்கே பொருந்தும். பெரும்பாலும்சித்திரகவி, $ அகலகவியாயிருப்பதரிது. ஏனெனில் சித்திரகவி சொல்லணியின் தன்மையுள் மூழ்கிக் கிடப்பதால் ஏனைய இலக்கணநோக்கி லீடுபடுவதில்லை. ஆகையால் அகலகவியே நால்வகைக் கவித்திறமும் பெறக்கூடும். அங்ஙனம் பெற்ற செந்தமிழ்ச் செல்வம் நமது திருநாவுக்கரசரே யாம்.

(i) ஆசு.

நீற்றறையிலிருந்து வெளிவந்தவுடன், அவ்வறை யெவ்வா றிருந்ததென்பது,

மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலு வீங்கு இளவேனிலும்;
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே

என்று கூறி, (ஆயினும்) நீற்றறையின் குணமன்று இறைவன் திருவடி நிழல் அவ்வுஷ்ணத்தை மறைத்ததென்றார். இவர் பதிகத்தில் எழுத்துக்கள் பெரும்பாலும் அமுத வெழுத்தாய்ச் * சொற்கள் மங்களகரமான சொற்களாய்ப் பொருள்நிறைந்து பற்பல அணிகளுடன் விளங்கும் தொடர்மொழிகள் ஓரே கணத்திற் பாடப்பட்டமை சேக்கிழார் கூறுகின்றார். அப்பரும் தான் ஒருகாலத்தில் கவிபாடச் சந்தி பெற்றிருந்தவர் "சிவனருளால் சத்திபெற்றே" னென்கிறதால் இவர் கூற்று, சேக்கிழார் கூற்றுக்கு ஆதாரவாகின்றது.

பன்னியசெந் தமிழறியேன் கவியேல மாட்டேன்
எண்ணோடு பண்ணிறைந்த கலைக ளாய
தன்னையுந்தன் றிறத்தறியாப் பொறியி லேனைத்
தன்றிறமு மறிவித்து நெறியுங் காட்டி
அன்னையையு மத்தனையும் போல வன்பாய் [ட
அடைந்தேனைத் தொடர்ந்தென்னை யாளாக்கொண்

‡ ஏறிய மாலைமாற் றேசக்கரமினத் தாலெழுத்தாற்
கூறிய பாட்டு விறுவுத்தர மேகபாத மன்றித்
தேறிய காதை காப்புச் சுழிகுளம் சித்திரப்பா
வீறியல் கோமுத்திரியும் பிறவும் விர்த்துரையே
—வீரசோழியம் (அலங்காரப்படலம். 39)

$ (i) வித்தார கவியை விளம்புங் காலை
யத்திறம் தொடர்நிலை யடிபல நடக்கும்
தனிப்பா வென்னத் தானிரண் டாகும்
—இலக்கண விளக்கம். 767

(ii) அவற்றுள், தொடர்நிலை விகற்பங் கடையில வெண்ப
ஷை 768.

(iii) விரித்தபா மகட்குட் வேட்கு மிறைக்கும்
பொருத்த மீரைந்தும் போற்றல் வேண்டும் —ஷை 769

(iv) மங்கலஞ் சொற்பால் வருண முண்டி
தானமக் காஈா டப்பாக் கதிகண
மான வீரைந்து மம்முதற் சீர்க்குப்
பொருத்த மென்னத் தெரிந்தனர் புலவர் —ஷை 770

(v) கூறிய விலக்கணம் குறைபா டின்றித்
தேறிய மூவகைச் சீர்முத லாக
அகலக் கவிதா னமையு மென்ப —ஷை 804.

* க, ச, த, ப ந, ம, வ, வேழொடு மகர
மிகா முகர மெகர நான்கு
மமுத வெழுத்தென் றறைந்தனர் புலவர்
—இலக்கண விளக்கம் 779.

தென்னெறும்பி யூர்மலைமேன் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப்பெற்றேன்நானே.

என்னும் திருத்தாண்டகத்திலும் "பன்னாள் பாமாலை பாடப் பயில்வித்தானை" என்பதாலும், அப்பர் ஆசுகவிடாய்ப் பாடினரென்பது திண்ணம்.

அப்பர் தான் ஆசுகவியாய்ப் பாடவல்லவரென்று தற்புகழ்ச்சி செய்கிறவரல்லர். ஆதலால் அவர்மொழிகளில் அவரையு மறியாது விழும் சொற்றொடர்களாலே அப்பர் ஆசுகவியென்று நிரூபிக்கக்கூடும். அத்தன்மைய தேவாரத்தில் சிலவே கிடைக்கின்றன. அவற்றுள் ஒன்று திருமறுமாற்றத் திருத்தாண்டகம் 10-ம் பாசுரம்:—

நாவார நம்பனையே பாடப் பெற்றோம்
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவாவென் றெமையாள்வா னமரர் நாதன்
அயனெடுமாற் கறிவரிய வனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை [வந்து
சேர்ந்திருந்தான் றென்திசைக்கோன் றனை
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலுங்
குணமாகக்கொள்ளோ மெண்குணத்தோமே.

மற்றொன்று திருப்புள்ளிருக்கும் வேளூர் திருத்தாண்டகம், 3-ம் பாசுரம்:—

பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பன்னாட்
பாமாலை பாடப் பயில்வித் தானை
எத்தேவு மேத்து மிறைவன் றன்னை
யெம்மானை யென்னுள்ளத் துள்ளே யூறும்
அத்தேனை யமுதத்தை யாவின் பாலை
யண்ணிக்கும் தீங்கரும்பை யரனை யாதிப்
புத்தேளைப் புள்ளிருக்கும் வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே.

இதன்றியும் திருமறைக்காட்டில் தான் பாடிக் கதவைத் திறக்கச்செய்ததை விதியின்றித் திருவாய்மூரில் மொழிய நேர்ந்தது. ஏனெனில்,

திறக்கப் பாடிய வென்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித்தா ருங்கின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே.
திருவாய்மூர் - திருக்குறுந்தொகை 8.

என்னும் பாசுரத்தில் திருநாவுக்கரசர் கடவுளை நோக்கி, "அண்ணலே! எனக்கு மறைந்திருப்பது பொருந்தும் என்னினும் சிறந்த செந்தமிழில் உறைப்புப் பாடி யடைப்பித்த புகலிவேந்தன் இதோ நிற்கின்றாரே, அவருக்கு நீர் மறைந்துநிற்பது என்ன பித்தம். பித்தர்களை ஆட்டுவிக்கும் சந்திரன் உமது செஞ்சடையில் கொண்டதின் பயனோ இது" என்று பாடிய கவி எத்தன்மைய ஆசுகவி! இப்பாசுரத்திற்குப் பொருளும் அணியும் வரையறுக்க யாரால் முடியும்?

இவ்வாறு ஆசுகவி பாடியது இவர் சிதம்பர தரிசனம் செய்த காலத்திலுமுண்டு என்பதற்கு ஆதாரம்:—

பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரம யோகி
எத்திறம் பத்தி செய்வேன் என்னைநீ யிகழவேண்டா
முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் னாடல் காண்பா னடியனேன் வந்த வாறே (1)
கருத்தனாய்ப் பாடமாட்டேன் காம்பன தோளிபங்கா
ஒருத்தாலறிய வொண்ணாத் திருவுரு வுடையசோதி

திருத்தமாந் தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற் றம்பலத்தே
நிருத்தநான் காணவேண்டி நேர்பட வந்தவாறே (2)

பார்த்திருந் தடியனேனுன் பரவுவன் பாடியாடி
மூர்த்தியே யென்பனுன்னை மூவரின் முதல்வனென்பன்
ஏத்துவா ரிடர்க டீர்ப்பாய் தில்லைச்சிற் றம்பலத்துக்
கூத்தாவுன் கூத்துக்காண்பான் கூடநான் வந்தவாறே 6
கோயில் திருநேரிசை.

பிற தேசங்களைக்காட்டிலும் நமது தமிழ்நாடு ஆசுகவிகள் அதிகமாய் நிறைந்த நாடென்னலாம். அதற்குச் சான்று ஆண்மக்கள் ஏத்தப்பாட்டும் பெண்பாலர் தாலாட்டு மாகும். அவை எதையெடுத்து எதைக்கொண்டு முடியுமென்று நாம் அறியவொண்ணாது, அவ்வாறே வாகீசரும் முதலில் ஒரு சொற்றொடர் ஆரம்பித்து ஒரு பாசுரம் பாடியபின்னர், அச்சொற்றொடரையே பின்னர் முன்பின்னாக மாற்றிக் கவி பாடுவதைக் காண்க:—

விருத்தனாய்ப் பாலனாகி விரிநிலா வெறிக்குஞ் சென்னி
நிருத்தனார் நிருத்தஞ்செய்ய நீண்டபுன் சடைகள்தாழக்
கருத்தனார் தில்லைதன்னுட் கருதுசிற் றம்பலத்தே
அருத்தமா மேனிதன்னோ டனலெரி யாடுமாறே. 9.
பாலனாய் விருத்தனாகிப் பனிநிலா வெறிக்குஞ்சென்னிக்
காலனைக் காலற்காய்ந்த கடவுளார் விடையொன்றேறி
ஞாலமாந் தில்லைதன்னு ணவின்றசிற் றம்பலத்தே
நீலஞ்சேர் கண்டனார்தா நீண்டெரி யாடுமாறே
கோயிற் றிருநேரிசை-பண்-கொல்லி 10.

இம்மாதிரிபாடுவதே ஆசுகவியின் முதிர்ச்சியாகும். இவை அப்பர் பண்ணுடன் இசைபாடும்போதே யாப்பில் யாதொரு பழுதுமற்ற பாசுரங்கள் மேலெழுமென்பதை ஆங்காங்கு அவர் திருவாக்கா லறிகின்றோம்:—

விண்ணினை விரும்பவைத்தார் வேள்வியை வேட்கவைத்
பண்ணினைப் பாடவைத்தார் பத்தர்கள்பயிலவைத்தார்[தார்
மண்ணினைத் தாவநீண்ட மாவினுக் கருளும் வைத்தார்
கண்ணினை நெற்றிவைத்தார் கழிப்பாலைச் சேர்ப்பனாரே
திருக்கழிப்பாலை-திருநேரிசை 2

பண்காட் டிப்படி யாயதன் பத்தர்க்குக்
கண்காட் டிக்கண்ணி னின்ற மணியொக்கும்
பெண்காட் டிப்பிறைச் சென்னிவைத் தான்றிரு
வெண்காட் டையடைந் துய்ம்மட நெஞ்சமே.
திருவெண்காடு-திருநேரிசை 1.

திருநாவுக்கரசு நாயனார் பாடிய பாசுரங்கள் ஆசுகவியாயிருப்பதன்றியும் கலைஞான ரசங்களும் நிறைந்தனவென்பதற்கு அவர் திருவாக்கே ஆதரவாகும்:—

கலைஞானங் கல்லாமே கற்பித் தானை
கடுநரகஞ் சாராமே காப்பான் றன்னைப்
பலவாய வேடங்க டானே யாகிப்
பணிவார்கட் கங்கங்கே பற்றா னானைச்
சிலையாற் புரமெரித்த தீயா டியைத்
திருப்புன்கூர் மேவிய சிவ லோகனை
நிலையார் மணிமாட நீடு ரானை
நீதனே னென்னேநா னினையா வாறே.
திருப்புன்கூர்-திருத்தாண்டகம் 4.

கலைக்கன்று தங்கு கரத்தான் கண்டாய்
கலைபயில்வோர் ஞானக்கண் ணானன் கண்டாய்
அலைக்கங்கை செஞ்சடைமே லேற்றான் கண்டாய்
யண்ட கபாலத்தப் பாலான் கண்டாய்
மலைப்பண்டம் கொண்டு வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியின் மேவிய மைந்தான் கண்டாய்
குலைத்தெங்கஞ் சோலைசூழ் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் றானே.
திருக்கொட்டையூர்-திருத்தாண்டகம் 2.

ஆசுகவிபாடலே அப்பருக்கு மிகவும் பிரியமான செய்கையாயிருந்ததென்பதற்கு அத்தாட்சி:—

விளக்கினார் பெற்றவின்ப மெழுக்கினாற் பதிற்றியாகும்
துளக்கினன் மலர்தொடுத்தாற் றாயவிண்ணோ றலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ஞ்ஞெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ்சொன்னார்க் கடிகடா மருளுமாறே
தனித்திருநேரிசை 3.

ஆனால் தான் வீணைமுதலிய இசைக்கருவிகளுடன் பாடவில்லையென்பது அவருக்கொரு குறைபோலும்!

கூழையே னாகமாட்டேன் கொடுவினைக் குழியில்வீழ்ந்து
ஏழினின் னிசையினாலு மிறைவனை யேத்தமாட்டேன்
மாழையொண் கண்ணினல்ல மடந்தைமார் தமக்கும் பொல் [லேன்
ஏழையே னாகிநானு மென்செய்வான் றோன்றினேனே.
குறைந்த திருநேரிசை 3

கலைத்திறம் நுனிக்குங் கலைஞன்.

[The Critic as Artist—Oscar Wilde]

532 பக்கத் தொடர்ச்சி

உண்வருந்தியபின், எர்னஸ்ட் என்பான் தன் நண்பனை நோக்கி, "உண்டி முடித்தோம், இனி நாம், விட்டவிடமிருந்து நமதுரையைத் தொடரலாவோம், வா" என்றழைக்கக் கில்பர்ட்டோ, "அதுவேண்டா, அப்படிச் செய்வது சுவையிலாததொன்றாகும். மேனேக்காக நேரும் விஷயங்களைப்பற்றிப் பேசி இருப்பதே புசித்தபின் முறை. சில விஷயங்களைப்பற்றிக் கட்டுரை எழுத நான் கருதியுள்ளேன். அவைகளைக்கருதி வார்த்தையாடுவோம், வா" என்று பதில் மொழிந்தான்.

எர்னஸ்ட்:—அது என் கருத்தன்று. நாம் இதுவரையிற் பேசிப்போந்த, 'ஆராய்ச்சி' என்னும் விஷயமாய்த்தான் பின்னும் இனிப் பேச விரும்புகின்றேன். நூலொன்று தன்னுள் கொண்டிருக்கும் கருத்திதுவென்று எடுத்துக் காட்டுவது ஆராய்ச்சி யன்றென்றும், நூலொன்றினுட் புகுந்து துய்ப்பதால் ஒருவனுள்ளத்தில் உதிக்கலாகும் கருத்துக்களைச் சொல்லிவைப்பதே உண்மையான ஆராய்ச்சியென்றும் ஊக்கமுடன் நீ சற்றுமுன்பு கூறிவைத்தாய். ஒரு நூலின் உள்ளும்புறமு மாய்ந்து அன்னது தன்னிடத்தே தாங்கியுள்ள உட்பொருளை விளக்குவதும் ஆராய்ச்சியைப் பற்றிநிற்கும் வேலைகளில் ஒன்றன்றோ, சொல்வாய்.

கில்பர்ட்:—சொல்கின்றேன், கேள். நீ கூறியபடி நூலின் கருத்தைத் தீர்ந்தறிவது ஆராய்ச்சி இலக்கணத்தின்பாற் பட்டதொன் றன்றாயினும், நண்பா, ஆராய்ச்சிகாரன் விரும்புவானாயின் அதனையும் செய்ய

லாம். அது ஆராய்ச்சியின் தாழ்ந்த படியே. இத்தாழ்ந்த படியிலுங்கூடச் சொல்வதற்கும் விளக்குவதற்கும் பலஅரியவிஷயங்கள் இருக்கின்றன.எனினும் விளக்குவதுடன் நிற்பது முற்றிய ஆராய்ச்சியாகாது. இருக்கும் விஷயத்தை 'இதுவென்று' விளக்குவதைக் காட்டிலும், விளங்குகின்ற விஷயத்தையும் மயக்கமுற மறைத்துப் படிப்பவர்கள் வியக்குமாறு செய்வதும், நூலினையும் நூலுடைத்தலைவனையும் பட்டுத் திரையிட்டு மறைப்பதுவும் ஆராய்ச்சியின் தனித்தொழிலாகும். கடவுளரும் பக்தர்களும் மிகவிரும்பும் இச்செயலே செய்தமைவான் ஆராய்ச்சி மிகவல்லான்.

கவிதிலகன் ஷேக்ஸ்பியர் ஆக்கிவைத்த காவியத்தை உள்ளபடி அனுபவிக்க வேண்டுமெனின், நாம் தெரியவேண்டுவன பலவுள. அன்னவன் காலமும் அக்காலக் கலைப்போக்கும், அவனுக்கு முன்னிருந்தார் பின்னிருந்தார் ஆற்றலின் தன்மையும்,நாடகவிதிகளும், நடனமேடையின் நிலையும் அதன் விதிகளும், காலநிலைமையும் இவைகளை ஷேக்ஸ்பியர் கையாண்ட செவ்வியும் ஆயபல செய்திகளை நாம் தெரியவேண்டுவது அவசியமே. இல்லையெனில் ஷேக்ஸ்பியர் நூலினைச் செவ்விய சுவையோடு அனுபவிக்கஇயலாது. எனினும் இதனுடனேநிற்பதுதான் ஆராய்ச்சியன்றென்று கூறுகின்றேன். தனது பேரையும் படித்தறியாப் பேதை எவனு மெளிதில் தெரிவதற்கியன்ற வொன்றை, நூலின் உள்ளக்கிடக்கையென்று காட்டிவைப்பது ஆராய்ச்சியின்பாற் பட்ட செய்தியன்று. ஆகவே தெரிந்தவன் அவ்வழி பற்றமாட்டான். கலையோ ஆய்வதறிந்தோன் வழிபடு தெய்வமாகும். அத்தெய்வமகள் தன் குடங்கையுள் குவித்துக்கொண்டுள மறைபொருளைப் பின்னும் இரகசியமாகச் செய்வதே அன்னவன் முதலும் கடையுமான வேலை. பார்ப்பவர் ஆச்சரியமுறும் வகையில் அவளது மாட்சியைப் பெருக்குவதே அன்னவன் முதலும்கடையுமாய கடமை.

'காலமிது, தேசமிது' என்று வெட்ட வெளிச்சமான செய்திகளை இவனும் ஒருமுறை திருப்பிச் சொல்வதால் என்ன பயன். நூலொன்றின் உள்ளக்கிடக்கையையும்,ஆக்கியவன் உள்ளத்தின் தன்மையையும், ஐய, தன் உள்ளத்தைத் தெரியாதார் தெரிந்துரைக்க இயலுமோ? நீயே சொல். நீ அறிந்த உன் உள்ளம் அந்நூலினுள் கலவாக்கால் 'உண்மை விளக்கம்' என்பதெல்லாம் ஊமையன் உரைத்துவைக்கும் வாசகமேயாகும். உள்ளத்தின் பற்றில்லா விளக்கமெலாம் வெற்றுரையே.

எர்னஸ்ட்:—ஆய்வோன் உள்ளம் புறமிருந்து நூலினுள் புக்கிருத்தல் நூலின் அமைதிக்கு வேறுபட்டதாகும் என்றன்றோ நான் இதுவரையிற் கருதியிருந்தேன்.

கில்பார்ட்:—அன்ப கேள். உள்ளத்தின் தொடர்பு இல்லாக்கால் விளக்கம் இல்லை. ஒன்றை ஆய்ந்து விளக்குவதற் கியன்ற கருவி உள்ளமே. ஒருவனை நீ அறிய வேண்டுமெனின், நண்பா, உன்னை நீ முதன்முதலாக அறிந்துகொள்ள வேண்டும். தன்னை அறிந்தவனே உலகத்தை அறிகின்றான். பிரபஞ்ச அறிவின் அஸ்திவாரம் தன்னறிவினில் இருக்கின்றது. இதை உதாரணங்களால் சிறிது விளக்குவேன்.

சிலையாகட்டும் சித்திரமாகட்டும், பாட்டாகட்டும், ஒவ்வொரு கலையும் ஆயப்படுகின்றது. ஆராய்ச்சி இல்லையேல் கலையுமில்லை. நடிகனைப் பார்ப்போம். அவன் செய்வது என்ன? நடனத்தின் பின்னிருப்பது ஆராய்ச்சியன்றோ? கவியின் சொல்லை எடுத்துக்கொண்டு, தன் சாரீரத்தாலும் நடனத்தாலும், கவியின் நூலை விளக்கிவைக்கின்றான். பாடுவது ஆராய்ச்சி அன்றோ? ஒருபாட்டுச் சுவைபெறுவதும் பாடுகையிற்றான்.பாடுபவனது ஆற்றல் கலப்பதால் அப்பாட்டு விளக்கப்பெற்று நமக்குச் சுவையைத் தருகின்றது. அவ்வாறே ஒவ்வொரு கலையும் ஆராய்ச்சியால் விளக்கமும் பெருமையும், வளர்ச்சியும் பெருகின்றது. தேர்ந்த நடிகன் ஷேக்ஸ்பியர் நாடகத்தை நடித்துக் காட்டுகையில் நாம் புது அனுபவத்தைப் பெறுகின்றோம். ஆற்றலிற் கேற்றபடி நடிப்பவன் நடிக்கையில் நாடகமும் புதியபுதிய விளக்கத்தைப் பெறுகின்றது. ஏன்? விளக்கத்தில் நடிகனது உள்ளத்துத் தனி ஆற்றல் கலக்கின்றது. ஷேக்ஸ்பியர் ஆக்கிய ஹாம்லெட் என்னும் நாடகத்தை நடிப்பவன் ஒருவன், ஷேக்ஸ்பியர் கற்பித்தபடி ஹாம்லெட்டைத் தருவதில்லையென்றுந் தன்னுடைய ஹாம்லெட்டையே காட்டித் தருகின்றான் என்றும் சிலர் வார்த்தை வழங்குகின்றனர். ஷேக்ஸ்பியர் ஹாம்லெட் என்பதொன்றில்லை; பொருளற்ற வாசகங்கள் பலவற்றில் இதுவொன்று.ஷேக்ஸ்பியருடைய ஹாம்லெட்டைத் தராதிருப்பதாற்றான் நடிகன் பெருமை பெறுகின்றான். ஷேக்ஸ்பியர்போன்ற பெரியோர் காலஅளவிற் குட்பட்டவரல்லர். பெரிய நூல் ஒன்று பிறந்ததாயின் அது எல்லாக்காலத்தும் உயிருடன் இருக்கவல்லது என்பதை ஆராய்ச்சிகாரர் தங்களது ஆற்றலால் நாட்டிவைக்கின்றனர்.

ஆக்குவோனது உள்ளத்தினின்று பிறக்கின்றன பெருங்கலைகள். ஆகவே, ஆய்வோன் உள்ளத்திலேதான் அவைகளுக்கு விளக்கம் ஏற்படும்.

பிறந்தன இறக்குமென்னுமவ் விதிக்குப் புறநடை கலைதரு பொருள்கள். "வருபவர் வருக, செல்பவர் செல்க இருப்பது என்றும் என்னுடைத் திறனே" எனச் சாற்றுவதுபோல் கலைப்பொருள் விளங்கி வாழ்கின்றது. நாமோ இப்பொழுது முன்னேறி வருகின்றோம்.நாம் முன்னேறமுன்னேற அறிவுடையோர் நிலவுலக வாழ்க்கையை விட்டுவிலகிக் கலையுலகிற் குடியேறுவர். மானுட வாழ்க்கை முழுமையில்லாதது. அதை அணுகுபவர் சிறுமையே பெறுவர். கலையுலகம் தந்துவைக்கும் உவகை அயலொரு வுலகத்தில் சிறிதுமுண்டோ! ஹோமருடனும், வர்ஜிலுடனும் கைகோத்து வழிநடக்கலாம். கிரேக்கிய வீரருடன் வார்த்தையாடலாம். நினைக்கவும் நவிலவும் அழகாய நல்லுரைகள் இடம்பெற்றவக் கவியுலகில் நடமாடலாம். இடும்பையொன்றும் நாம் எய்தாது கண்ணீர் விடுபவருடன் அனுதாபக்கண்ணீர் சொரியவும், பிறர் இன்புறக்கண்டு நாம் அவ்வியம் அணுகா அகத்துடையராய் மகிழ்வெய்தவும் இலக்கிய உலகத்திலேதான் முடியும். இழப்பதென்றும் செழிப்பதென்றும் ஆதாரம் ஒன்றுமின்றி, இணையவும் இனிக்கவும் பயின்றுள மனமே பூரணத்தன்மை பெற்றதாம். இக்குறையிலாப் பூரணம் மகிழ்வெய்தித் துலங்குவது கலையினிடந்தான்.

நண்பா, அனுபவம், அனுபவம் என்கின்றாயே, அவ்வனுபவத்தைக் கலையுலகில் நீயும் நானும் பெற

லாம். வாழ்க்கை! வாழ்க்கை! அச்சிறுமை வாழ்க்கையினிடம் நாம் அனுபவம்பெறுமாறு போகாதிருக்கத் திருவருள் துணைபுரியட்டும். கலையில் இல்லாததொன்றில்லை. நாம் அனுபவம் பெறவென்று வாழ்க்கையினிடம் செல்வதென்பது, மலைகல்லி எலிபிடிக்குமொரு முயற்சியாகும். அது அறிவுடைமையன்று.

எர்னஸ்ட்:—மனிதர் வேண்டுவதனைத்திற்கும் கலையின்பாற் சென்றால் போதுமா?

கில்பர்ட்:—நீ வேண்டும் ஒவ்வொன்றிற்கும் கலையினிடம் சென்றால் போதும். ஏனெனின் கலை நமக்குத் துன்பத்தைத் தருவதில்லை. ஒரு நாடகத்தைப் பார்க்கையில் நாம் விடும் கண்ணீர், ஆதாரமில்லாவொரு உணர்ச்சியினிடமிருந்துபிறக்கலாகின்றது. கலையினது செயல் அதுதான். வருந்துகின்றோம், வருத்தமுறவில்லை. எனினும், கலைபடியாய்ப் பிறக்கும் இன்பமும் துன்பமும் நம்மை உயர்த்துகின்றன. உள்ளத்தில் தூய்மையை வளரச்செய்கின்றது. நமது பூரண தத்துவத்தை நாம் பெறவேண்டுமெனின் அதைச் செய்துவைக்கும் ஆற்றல் கலையினிடமே யிருக்கின்றது. சாவையும் நீத்த பாவலன் கைபிறந்த பாத்திரத்தின் சாவைக்குறித்து வருந்துவதும், மற்றவன் சந்தோஷத்தைக்கண்டு மகிழ்வதுமாய மனநிலைகளில் நாம் நிரந்தர இன்பம் பெறுவோமாயின் வேறு என்னவேண்டும் நமக்கு? (தொடரும்)

மாறன் பாப் பாவினம்.

[530-வது பக்கத் தொடர்ச்சி]

பரிபாடல்.

தரவு.

யாஅர் வாழ்வார் யாஅர் வாழ்வா
ரெனுமுல கனைத்து மீறிலா நிலை
யுருபொடு சொருபினை அறாதே மாயையின்
விரிந்த முதன்மா ஞென்றும் யானெனுந்
தொந்தமு மதனினெய் தியபுல னைந்து
மாகி யவையி னுற்றவு மான
வண்டமு மலகில் வடவமு மான்மா
முழுவது மயன்முத லமைந்திடுந் தாமாய்
பொழுதெதி ரொருபுன லும்பரி னுமால்
பொன்னியு ளமர்ந்தவ னல்லான்
மாயா வோர்தனி மழவேன் மகிழ்ந்து.

இது ஆசிரியத் தளையானும் வெண்டளையானும் வந்த பதினோரடித் தரவு.

நிலைமண்டில வாசிரியம்.

நூல்பல தாமு நுணங்கு மாரணப்
பாவி னுட்பமு மங்கா ரெனுஞ்
சால்புணர் புலவிர்காண் முந்திய முதல்வருள்

ஓ ஓ, (கூன்)

நிலைமண்டில வாசிரியம்

உணர்ந்தவீ துணர்கிலா வெள்ளை யறிவினுட்
புணர்ந்தோர் பொருட்கங் கிரங்கு புன்மையர்
புணர்ந்தோர் பொருட்கங் கிரங்கு புன்மையு
முணர்ந்தே னும்மையி னிழைத்த வூழென்
றுவலிதலாது பலவாய்த் தொகுத்த
வான்மா முழுதினு நிற்ப தறிகிலா.

இதுவும், நிலைமண்டில வாசிரியம். இதன் முதற்கணின்ற 'ஓ ஓ' வென்பது, 'சீர் கூனுதல் நேரடிக்குரித்தே" என்பதனால் 'தேமா' எனச் சிறப்பின் ஓ அளபெடுத்துச் சீர் கூனாய் முதற்க ணின்றது. அதனோடு ஐஞ்சீரடி யாக்கினு மிழுக்காது. என்னை? "வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியு மைஞ்சீரடியு முளவென மொழிப" என்பதனாற் கொள்க.

நேரிசை யாசிரியப்பா.

காயங் கழிதருங் காற்றன் றுருபு
ளாகவே யொருங்கவை காவ லின்புறு
மென்மையே சற்று முறுசில ரதனொடு
மீளவே யனைத்து மெழுபான் மையுற
நான்முகன் றனது செயலிது வென்னத்
தானுவாய்ப் படிமத் தமைத்தபான் மைகளும்
வாழுப்ப பருவத் தீரமில் சூரத்தின்
மீறுந் தானவ ரிடும்பையிற் பாறுவார்
பாறு மிடரேகன் டாளினுாங்
காளியாய்த் தூணி னுறல்.

இது, தன்றளையானும் வெண்டளையானும் வந்து பத்தடித்தா யீற்றயலடி முச்சீராய் 'நேர்நேரெ'னக் 'கண்ணென' வொற்றளபெடையா யிற்ற நேரிசை யாசிரியப்பா. கண்ணென்பதனை யொற்றளபெழாது சொற்சீராக்கினு மிழுக்காது.

அம்போதரங்கம்.

தோன்றி முன்னங் கவனுடல் போழ்ந்தது
மறுகில் லாதோமன் பதனையெனு மவைமன்.

அவனிற் பாரில் லல்லது பயந்த
வடல்பெருகு சிரங்கரம் பொருதிரு பதுளான்.

இவை யிரண்டு விகற்பத்தான்வந்த வீரடி யிரண்டம் போதரங்கம்.

தறுகணன்
மத்தமடவன்
மூர்க்கர் முன்னன்
கண்டா கண்டன்
கிருதர் பெருமான்
மதுகை யாளன்
அன்பி றீம்பன்.

வெண்பொன் வெற்பைக் கிளைத்த முன்பார்
தோளன்

மருப்புக்க ளுழுமூரன்
தீய்க்கக்கு நேத்திரன்

வாணிடி யெனத்தொனி மெய் சொல்லன்
நமனார் நடுங்க வமர்புரி பொருநன்
வானோர் நடுங்க வேல்விடு மறவன்

இவை, ஒருசீர் முதலாய சிற்றெண்ணும், அளவெண்ணும் வீராய் வந்தன.

அம்போதரங்கம்.

களைத்த வுள்ளமொடு கணக்கி னோன்பன்
றளித்தயல் வரத்துட னமையா யாக்கையன்

தன்னைச் சமர்முகத்தி னேர்கண்ட யதுதொடர
மன்னு முயிருண் வகைமையு நினைசிலர்

இவை, யீரடியிரண் டம்போதரங்கம்.

நிலைமண்டில வாசிரியப்பா.

அதன்பி னகன்றிருந்த தேவி படித்துணை
தொழுதன டுதித்தெழு பொழுதருள் செய்யா
வடைக்கல மென்றவ னாரருண்மெ யோரார்

இது, மூன்றடி நிலைமண்டில வாசிரியப்பா.

பின்னும்

இது ஒழியசை, தனிச்சொல்லென்பது மிது.

அம்போதரங்கம்.

பொதுவா மடவர னற்று மென்னும்
விதியினன் பான்முன் வெளிவர றேற்றூர்.

இதுவும், ஈரடியோ ரம்போதரங்கம்.

நிலைமண்டில வாசிரியப்பா.

தாயென வணிதையர் படிமேற் கொண்ட
பேயத ணவியன் றாண்டு போலுய்
மாஅயமுற் றெதிர்க்குஞ் சாடு முருளிற
கோலுய்வகுத் திழைத்தவன் முடியுதைந் ததுமுறூர்.

இது, நான்கடியாய் வந்த, நிலைமண்டில வாசிரியப்பா.

அராகம்.

முடிபடி யுறவசை மொழிபவ னுயிர்தளி
ரடியுற வருள்புரி நிலைமையு முறகிலா.

இது, தனியனாக வந்த வெண்சீரடி யராகம்.

சிற்றெண்.

ஆதிநாதன்
வாசுதேவன்
சங்கருடணன்
பைம்பொனினிறன்
பரத்துவசொரூபன்
சொலத்தகு வியூகன்
உரனுடை விபவன்
உயிர்களி னயனன்
வெளிவரு விமலன்
மறைபுரியமலன்
உளனிலன்
உணர்வுற வரியவன்.

என விவை சிற்றெண்.

என்பவை—இது, தனிச்சொல்.

நிலைமண்டில வாசிரியம்.

மறையின் மறைகளின் வழிநா லொண்மையி
னிறைநிலை யுணர்த்து மேமவா ரியர்முன்
மதிமரு ணிலையற வழிபடு மதியுற்
றறவாய்த் திறப்பட வுணர்த்தமெய்ஞ் ஞானம்
பிறவாப் பெற்றிகொண் டுணர்ந்தில ரலதும்.

இது, வைந்தடி நிலைமண்டில வாசிரியம்.

அதுவே

இதுவுந் தனிச்சொல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

இனியவ ருயிர்கட் கிரங்கியிங் கெவனென
வெனதுயிர் பிழைப்பதற் கிரங்குத லுடனே
தாமரைத் தவிசிற் சதுர்முகன் மேனு
ளாநிரை காத்தசிற் றுயரைக் கன்றினைக்
குறுந்தடி தாம்பொடு நீங்குழல் கொம்பிவை
மாயையின் வானுற வைத்திடப் பண்டையின்
யானையு மாகிமுன் னுதிக்குந் திறத்தினன்.

இதுவு நிலைமண்டில வாசிரியப்பா.

சிற்றெண்.

சுருதி முதல்வன்
சுதமி லமிர்தன்
மருதி வலவன்
பதுமை கொழுநன்

இவையு மோர்நாலுஞ் சிற்றெண்.

சுரிதகம்.

மீனமு மாமையு மேனமு மாகி
வாமன னுமமு வாளியு மானபின்
வருபல் தேவ னிவுளியு மவன
தருமன் முதல்வர் தமது நகர்பெற
நூற்றுவர் கூற்றுவ னகர்பெற வுய்த்தவ
னேற்றம துரைத்து மிறைஞ்சுவ துடனே
பிறவா நெறிபெற வேண்டி
மறவா தவனை மதிக்குமென் மனனே.

இது, எட்டடியான்வந்திற்ற நேரிசையாசிரியச் சுரிதகம். இதுவுந் திணை—பாடண், துறை—கடவுள் வாழ்த்து. கடவுள் வணக்க மெனினுமாம். இது, சங்கப்பாடலாய்ப் பரிபாடலுள், கடுவே னிளவெயினர் பாட்டாய் முதலே மூன்றுவதாய்ப் பெட்டனாகனரிசை பண்ணுப்பாலை யாழாய் "மாஅயோயே, மாஅயோயே" என்னும் பரிபாடல் போல வெருத்தமுங் கொச்சகமுமின்றி வந்த பரிபாடல். 2

சிலப்பதிகாரமும், மணிமேகலையும்.

[528 வது பக்கத் தொடர்ச்சி]

இயற்கை நவிற்சியும் இலக்கிய நெறியும்.

"தன்மைநவிற்சி யென்பது உள்ளதை உள்ளவாறே கூறுவது என்ற பொருளையே கொள்ளுமோ?" என எதிர்மறையால் வினவி, ஒரு மலரைக்குறித்து "என்னே இதன் இன்பம்!" என ஓர் காட்டும் காட்டுகின்றார். இதனுள் இன்மை புகுந்து நிற்கும் இருப்பு எங்கே? "புலவரின் பொய்யான புனைந்துரையும் தன்மைநவிற்சியுங் கலந்தால் உயர்ந்ததோர் கவிதையாம்" எனக் கவிதைக்கு இலக்கணந் தீட்டுகின்றார். இதைத்தான் பண்டைய பாவலர் தழுவிலர். "இயங்கியற்பொருளும் நிலையியற் பொருளும் ஆகிய உலகத்துப் பொருள்கள் செய்யுளிற் கூறப்படும்பொழுது அவற்றினியற்கை பிறழாமல் உள்ளவாறு கூறப்படுதல் வேண்டும். அவ்வாறு கூறும்பொழுதும் ஓரோவழிப் பொருள் புலப்படாதொழியினும், சுவை தோன்றாவிடினும் அவற்றோடு ஒப்புமையுடையவற்றைக் கண்டு சார்த்திக் கூறுதல் வேண்டும். ஒருபொருள் அதன் தன்மை பிறழாமல் கூறக்கேட்கு மிடத்தும், ஒத்த தன்மையுடைய வேறு பொருளோடு உவமித்துக் கூறக் கேட்குமிடத்தும் உண்டாகும் மகிழ்ச்சி பெரிது." எனத் தமிழ்ப்பெரும் புலவர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும்; "பொருள்களைக் கிடந்தவாறே சொல்லிக்கொண்டு போம் நெறி தன்மை நவிற்சி யெனவும், அங்ஙனம் சொல்லிப் போதற்கு இடையிடையேஉணர்வு சலிப்படையாமைப்பொருட்டுச் சுவை வேறுபடுத்தி, அப்பொருளோடு இயைந்த பிறபொருட்டோற்றத்தை எழுப்புநெறி உவமை உருவகம் எனவும்பெயர் பெறலாயின. தம்மாற் கூறப்படும் பொருள்களின் வழியே அறிவுநின்று அவற்றோடு ஒப்பச் செல்லுங்காற் புலவர்க்கு இயற்கையாய்த் தோன்றும் ஒப்பனைகள் உவமை உருவகம் என்னும் இவ்விரண்டேயாகலின், இவ் வியற்கைநெறி திறம்பி மிகவும் இடர்ப்பட்டுப் பலப்பலவான புனைந்துரைகளெல்லாம் அமைத்துப் பொருளுண்மை திரித்துக் கற்பார் மனோபாவக உணர்வைச் சிதைக்கும் பிறரெல்லாம் புலவரெனப்படுதற்குச் சிறிதும் ஏலாதவரென்பதூஉம், அவரான் அமைக்கப்படும் அணிகளெல்லாம் வெற்றாரவாரமெனும் போலிகளேயா மென்பதூஉம் உண்மையறிவுடையார்க்கெல்லாம் இனிது விளங்கற்பாலனவேயாம்...........பொருள்களைக் கிடந்தவாறே கூறின், அதனால் மனோபாவக உணர்வினைக் கவர்தல் ஏலாதெனின்; அற்றன்று, உலகியற்பொருள்களில் இயற்கையழ குள்ளனவும், அஃதில்லனவுமென இருபால் உளவாம்......அவற்றுள் அழகாற் சிறந்து மக்கள் மனவறிவை எளிதிலே கவர்தற்பயத்தவான அரிய பெரிய பொருள்களைக் கூறும் வழியெல்லாம் தன்மைநவிற்சியும், அவற்றினிடையே அவ்வியற்கை உயர்வுப்பொருளின் வேறுவன சில வந்தால் அவற்றை அழகுபெறக் கூறல்வேண்டி உவமை வைத்துரைக்கும் நுட்பம் மிகவும் நன்கு மதிக்கற்பாலதொன்றும்...........இவ்வுண்மை கடைப்பிடித்தன்றே ஒப்புயர்வில்லாச் செந்நாவன்மைச் செவ்வறிவுத் தெய்வப் பெற்றியாளரான ஆசிரியர் தொல்காப்பியனார் பொருளதிகாரத்துள் உவமவியல் என ஒன்றே வகுத்து, உவமம் ஒன்றே அணிந்துரையாவதென விளக்கி ஏனைப் போலிப் புனைவுகளையெல்லாம் அப்பாற் படுத்துவா ராயினர்." என மறைமலையடிகளும் பண்டைப் பாக்களினியல்பை நன்கு விளக்கியிருத்தல் அறியத் தக்கது. மற்றும், பொய்யான புனைந்துரையைப் பாடும் புலவரினும் உண்மையைப் பாடும் பாவலனே சீரியனும் வல்லவனும் ஆதல்வேண்டும். எங்ஙனமெனின், பொருள்களைக் கிடந்தவாறும் உவமித்தும் கூறும் புலவன் பல்வகைப்பொருள்களையும் கண்டுகண்டு அவற்றின் தன்மைகளை நுனித்தறிந்து மனத்தில் அமைத்துக்கொள்ளல் வேண்டும். பல்திணை மக்களின் பழக்கவழக்கங்களையும் உணர்ச்சி வேறுபாடுகளையும் நன்கறிந்தாராதல் வேண்டும். மனவியற்கைத்தன்மைகளையும் மிக அறிந்திருத்தல் வேண்டும். சுருக்கங் கூறின், அவர்க்கு உலகமே கல்லூரியாகவும், உலகிலுள்ள எப்பொருளும் அவர் கற்கும் பாடமாகவும் அமைந்திருத்தல் வேண்டும். மற்றப் பொய் புனைந்துரைக்கும் பாவலனுக்கு அவையாவும் வேண்டுங்கொல்?

"தன்மைநவிற்சியை விரும்பினால்...இயற்கைநெறியை விரும்புகின்றோம் என்று கொள்ள இடம் இல்லை" என முடிவு கட்டுகின்றார் திரு. சீனிவாசன். "எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்குஞ் சொன்முறை தொடுப்பது தன்மையாகும்" என்னும் தன்மைநவிற்சியி னிலக்கணம் இயற்கை நெறிக்கு மாறுபட்டு நிற்பதெங்ஙனமோ? அணிகள் பலவற்றுள்ளும் தன்மை நவிற்சியே மிகமிக உயர்ந்த தென்னுங் கொள்கை கருதியே அணிநூல்கள் பலவும் அதனையே முதலாக வைத்துக் கூறுதலும், அத் தன்மைநவிற்சியையே பழந்தமிழ் நூற்கள் பெரிதும் ஏற்று நிற்றலும் கண்கூடு. "தமிழில் பழைய தொடர்நிலைச்செய்யுள்கள் கதைப்போக்கிலே ஐந்திணைக் கருப்பொருள் உரிப்பொருள்களை உரைப்பனவன்றி, மலை, கடல், நாடு, வளநகர், பருவம் முதலியவற்றைத் தனியாக வாங்கிக்கொண்டு உயர்வுநவிற்சியாற் புனைந்துரைப்பதில்லை" என்னும் திரு. செ. முதலியாரவர்களின் உரை யான் முற்கூறிய அதனையே நன்கு வலியுறுத்தும். "இயற்கையின் வழியே" யென்னாமல் "இயற்கை யழகின் வழியே" யென்று மறைமலையடிகள் புகன்றதால் அவ்வழகு கவிஞன் மனத்ததே எனமகிழ்வுறுகின்றனர், எனது விழுமிய தோழர். அழகைத் தன்னிடம் பெறாத இயற்கைப்பொருள்கள் புலவன் மனத்து உதித்ததும் அழகைப் பெற்றுவிடுதல் வியப்பே. "உலகத்தில் அழகு மிக்குடைய பொருள்களைக் காணுங்கால், மக்களது அறிவு, அவற்றில் அழுந்தி நின்று இன்புறுதல் கண்கூடாம். அத்தகைய பொருள்களை வெவ்வேறிடத்துத் தனித்தனியாய்க் காண்பதினும், அவை பலவற்றையும் தொகுத்து வைத்துள்ள காட்சிமன்றத்தில் ஒருசேரக் காணுங்கால், செயல்களும், ஒற்றுமை வேற்றுமைகளும் எண்ணிறந்த வகையாய்த் தோன்ற, அவைகளை அங்ஙனம் படைத்தருளிய முழுமுதற் கடவுளின் வரம்பிலாற்றலை நினைந்து வியந்து உருகுகின்றோம். அங்ஙனம் பல்பொருளும் தொகுத்து வைத்துள்ள காட்சிமன்றந்தானும், எக்காலத்தும் எவ்விடத்துமுள்ள யாவர்க்கும் ஒருசேரப் பயன்படுவதின்று. நல்லிசைப் புலவராயினாரே அப்பொருள்களைத் தம் பாட்டுக்களில் தொகுத்துவைத்து, எக்காலத்தில் யாவருள்ளத்தும் நிலவுமாறு செய்யவல்லுநர்" என்னும் ந-மு-வே நாட்டாரவர்களின் திருவுரையும்; "கற்போ ருணர்வைக் கவருந்திறத்ததாய், அழகிய இயற்கைப்பொருள் நிலைகளை இருந்தவாறே எடுத்து மொழிவதாய்" என்றும், "உலகியற் பொருள்களில் இயற்கையழ குள்ளனவும், அஃதில்லனவும் என இருபால் உளவாம்" என்றும் வரும் மறைமலையடிகளின் திருவுரையும் இயற்கைப் பொருள்கள் கவிஞன் மனத்தினின்றும் பிறந்தபின்னரே அழகைப் பெறுவனவா, அன்றி முன்னரே பெற்றுள்ளனவா என்பதைத் தெளிவுபடுத்தும்.

இனி, "பண்டைக் காலத்திலிருந்த பலவகை மாந்தருடைய ஒழுக்கம் முதலியவற்றை இக்காலத்தார் எளிதிற் றெரிந்துகொள்ளுதற்குச் சிறந்த கருவியாகவுள்ளது" எனச் சிலப்பதிகார முன்னுரையிலும்; "...... பண்டைக்கால நிலைமைகளையும், அக்கால நாகரிகமுறையையும், வைதிக ஒழுக்கங்களையும், தெய்வ வழிபாட்டு முறையையும், பிற வழக்கங்களையும், தமிழ்நாட்டின் வரலாறுகள் சிலவற்றையும் செவ்வனே தெரிந்துகொள்ளுதற்குச் சிறந்த கருவியாகவுள்ளது" எனப் பரிபாடல் முன்னுரையிலும் அவற்றைப் பதிப்பித்த ஐயரவர்கள் வரைந்துள்ளதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

இதுகாறுங் கூறியவாற்றான் நாட்டுவரலாறும், இலக்கியமும் வேறுவேறாயினும், நம் பண்டைய நூற்கள் ஒரு முறையில் நாட்டுவரலா றுரைப்பவும், பிறிதொரு

முறையில் இலக்கியமொப்பவும் திகழ்கின்றனவென்பதும்; அங்ஙனந் திகழ்தற் கேது அவை கொண்ட இயற்கைநெறியே யென்பதும்; உவமும் உருவகமும் இயற்கையின் மாறுபட்டதன்றென்பதும்; இயற்கை நவிற்சி புனைப்படத்தை யொத்து நிற்பினும், மற்ற தனினும் ஒவியத்தினும் சிறிதுமேம்பட்டே நிற்குமென்பதும், அதனாலது "உள்ளதை உள்ளவாறேகூறுவது" என்னும் எல்லைக்குஅப்பாற்பட்ட தன்றென்பதும்தன்மைநவிற்சியே அணிகள் யாவற்றினும்தலைசிறந்ததென்பதும்; அதனைத் தழுவி யாத்தநூல்களே பெரிதும் போற்றப்படுகின்றன வென்பதும்; அங்ஙனம் இந்நாள் போற்றப்படுவன பண்டையநூற்கள் என்பதும் தேற்றம்.

"பாட்டெனப்படுவது........................
........................முதுவாய்ப் புலவோன்
பாவிடைச் சுருங்கிய பயங்கெழு சொல்லிற்
கருதுதொறு மாழ்ந்த காழ்த்தபொருள் பொதிப்ப
என்பு நெக்குருகும் இசையுடன் றழீஇ
இயற்கையின் வழாமல் அறிவொருங் குறுத்தி
இன்புணர் வெழுப்பி யன்பே யுருவாம்
முழுமுதற் பொருளொடுங் கெழுவிடப் பயக்கும்
ஆறுத் தலைமைப் பான்மைய துடைத்தே;
இத்தகு சிறப்பின் நற்றமிழ்ப் பாக்கள்
பின்றைநாட் காண்டல் பேரிதரி தாயினும்
பண்டைக் காலத்துப் பழுத்தறிவு மாண்ட
நல்லிசைப் புலவோர் நயமுறக் கிளந்த
முதிர்கட லெக்கர் மணலினும் பலவே."

(மறைமலையடிகள்.)

தமிழ்ப் பாடம் 80.

[அஷ்ட பிரபந்தம்.]

[526வது பக்கத் தொடர்ச்சி]

திருவேங்கடமாலை

வடிவுபற்றியும் தொழில்பற்றியும் சினைபற்றியும் வந்த உவமைஅணிகளைப் பெற்றுள்ள செய்யுள்கள் சிலவும், பிரிநிலைநவிற்சியணி பெற்றுள்ள செய்யுள் ஒன்றும் இதன்முன் வாலாயின. இனி உயர்வுநவிற்சி அணிகள் அமைந்த சில செய்யுள்கள் வருகின்றன. கவி,தான் கூறவருகின்ற விஷயத்தினிடத்தில் உள்ள அபிமானத்தால் அதனை மிகுதியாகக் கூறுவது இவ்வணியின் இலக்கணம். அம்மிகுதியைக் காட்டுகின்றதற்குப் பற்பல யுக்திகளை மிகவும் அதிசயமாய்க் கவிகள் உபயோகப்படுத்துவார். ஒன்றன் தன்மையை மிகவும் உயர்த்திச் சொல்வதால் இவ்வணிக்கு உயர்வுநவிற்சி அணி என்னும் பெயர் ஆயிற்று. அவ்வாறு உயர்த்திச்சொல்வதைக் கேட்டுச் சனங்கள் அதிசயப் படும்படியான யுக்திகளால் அவ்வணி அமைவதால் வடமொழியில் அதனையே அதிசயோக்தி அலங்காரம் என்றழைப்பர். இவ்விஷயங்கள் முன் ஒரு சிறிது விளக்கியுள்ளோம். உவமையணி தற்குறிப்பேற்றவணி போன்ற அணிகளில் பலபிரிவுகள் இருப்பது போலவே இவ் வுயர்வுநவிற்சி யணியிலும் பல வகைகள் இருக்கின்றன. இப்படி வகைப்படுத்தி யமைப்பதில் இலக்கண நூல்கள் சிறிதுசிறிது வித்தியாசப்படும். அவைகளைப்பற்றி இங்கு நாம் பார்க்கவேண்டா. இந்த அணி தன் வரையில் அழகுதருவதோடு மற்ற அணிகளுக்கும் ஆதாரமாயிருந்து அழகினை மிகச்செய்வதால் எவ்வெவ்வகை யுக்திகளால் அவ்வதிசயம் தோன்றலாகின்றது என்பதை உய்த்துணர்ந்துகொண்டால் அவ்வணியின் சுவை பின்னும் நன்றாகத் தெரியவரும்.

அவ்வகை யுக்திகளில் தொடர்புபடுத்துவதொன்று. தான் கருதிய விஷயத்தின் மிகுதியைக் குறிப்பதன் பொருட்டு எவ்விதத் தொடர்பும் இல்லாத இரண்டு பொருள்களுக்கு ஒரு தொடர்பு கற்பித்துக் கூறுவதால் தொடர்பு உயர்வுநவிற்சி தோன்றும். இவ்வாறு, பிள்ளைபெருமாள் ஐயங்கார் எடுத்துக்கொண்ட திருவேங்கடமலையின்பால் அவருக்குஉள்ள அன்பினால் மகிழ்ந்து அதன் உயரத்தை மிகைப்படுத்திக் கூறவருபவராய்த் தொடர்பில்லாத இரண்டு பொருள்களுக்குத் தொடர்பு கற்பிக்கும் யுக்தியால் அவ்வுயர்ச்சியை அதிசயப்படும்படிசெய்யும் திறத்தைக்காட்டப்பலபல செய்யுள்கள் அமைத்திருக்கின்றார். அவைகளில் சிலவற்றைக் கற்போம்.

வாடப் பசித்த வரியுழுவை வாலாட்டி
மேடத்தைப் பார்த்துறுக்கும் வேங்கடமே—கூடத்துக்
கம்பவள மாவென்றான் காசினிக்கும் வெண்ணெய்க்
செம்பவள மாவென்றான் சேர்வு. 6 [குஞ்

பதப்பிரிவு:—வாட பசித்த வரி உழுவை வால் ஆட்டி மேடத்தை பார்த்து உறுக்கும் வேங்கடமே கூடத்து கம்பம் வள மா வென்றான் காசினிக்கும் வெண்ணெய்க்கும் செம் பவளம் ஆ என்றான் சேர்வு.

பதவுரை:—வாட - வாட்டமடையும்படி, பசித்த - பசியடைந்திருக்கின்ற, வரி - கோடுகளமைந்த, உழுவை - புலியானது, மேடத்தை - மேஷராசியை, பார்த்து - பார்த்து, வால் - தன்னுடைய வாலை, ஆட்டி - ஆட்டி, உறுக்கும் - கோபிக்கும் இடமான, வேங்கடமே - வேங்கடமலைதான்,

கூடத்து - யானைச்சாலையிலிருந்த, வள - மதவளம் பொருந்திய, கம்பம் - எப்பொழுதும் அசைந்து கொண்டிருக்கும், மா - மிருகமாகிய குவலயாபீடம் என்னும் யானையை, வென்றான் - வென்றவனும்,காசினிக்கும் - உலகங்களுக்கும், வெண்ணெய்க்கும் - வெண்ணெய்க்கும், (உண்பதற்கு ஆசைப்பட்டு)செம்- சிவந்த, பவளம் - பவளம்போன்ற தன் வாயை, ஆ என்றான் - ஆ என்று திறந்தவனுமாகிய திருமால், சேர்வு - சேர்ந்திருக்கும் இடம்

விரிவுரை:—சூரிய மண்டலத்தைவிட உயர்ந்தது ராசி மண்டலம். நம்முடைய வானசாஸ்திரத்தின் படி, மேஷம் விருஷபம் மிதுனம் கடகம் சிம்மம் கன்னி துலாம் விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் மீனம்,எனப் பன்னிரண்டு இராசிகள் இருக்கின்றன. ஒவ்வொரு இராசியும், சில நக்ஷத்திரங்கள் ஒன்றாய்ச்

18063

சேர்ந்திருக்கின்ற கூட்டம். இந்த இராசிகள் ஒவ்வொன்றும் சூரியன் சந்திரன் போல உதயமாவதும் உச்சிக்கு வருவதும் அஸ்தமிப்பதும் உண்டு. இந்த இராசி மண்டலங்களினளவு உயர்ந்தது திருப்பதி மலை என்று கவி சொல்லிக்கொண்டு வருகின்றார். அது மிகை. ஆனால் அதை நேராகச் சொல்லவில்லை. இம் மலையின்மேல் இருக்கின்ற ஒவ்வொரு பொருளோடு அந்த இராசிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு சம்பந்தம் கற்பிக்கின்றார். திருப்பதி மலையில் வசிக்கும் புலிக்கும் மேடராசிக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை யென்பது தெரிந்திருக்கவும், அவையிரண்டிற்கும் ஒரு சம்பந்தம் கற்பித்து, இப்புலி அந்த மேடராசியைப்பார்த்து வாலாட்டிக் கோபிக்கும் என்று ஒரு தொடர்பு காட்டியபடியால் இந்தச் செய்யுள் தொடர்பு உயர்வுநவிற்சி அணி ஆயிற்று. சமஸ்கிருத பதம் 'மேஷம்' என்பது. தமிழில் "மேடம்' என வழங்கும். மேஷம் என்பது ஆடு என்னும் மிருகத்தின் பெயர். மேஷராசி பார்ப்பதற்கு ஆட்டைப்போல் இருக்கும் என்றுகூடச் சொல்வதற்கில்லை. சொல்லளவிலே மேஷம் என்பது ஆடு எனப் பொருள்படுவதால், அதையே நிபமாகக் கொண்டு பசித்திருந்த இப்புலி கோபிப்பதாயிற்று. காஞ்சிபுரமென்னும் ஊரைச் சேர்ந்த வரதப்பன் என்னும் ஒருவன் தெருவேபோக, அவனை இன்னொருவன், 'கஞ்சி வரதப்பா' என்று கூப்பிட்டபோது, பசியால் வாடியிருந்த ஒருவன் ஆவலோடு, 'எங்கே வாது அப்பா'' (எங்கே கஞ்சி வருகின்றது) என்று கேட்டான் என்னும் விகடக்கதை கேட்டிருப்பீர். பசித்திருந்த புலியின் நிலையும் 'மேஷம்' மலையுச்சி வந்தபோது அவ்வாறாயிற்று

குறிப்பு:—யானை கட்டுமிடத்தைக் கூடம் என்று அழைப்பர். பூகம்பம், சிரக்கம்பம், என்று வழங்கும் இடங்களைப்போல், கம்பம் என்ற வடமொழிக்கு 'அசைதல்' என்பது அர்த்தம். யானை எப்பொழுதும் அசைந்துகொண்டே இருக்கும் காரணம்பற்றி அதற்குக் 'கம்பமா' என்ற பெயருண்டு. அசைகின்ற மிருகம் என்பது அதன் அர்த்தம்.

பவளம் என்ற சொல், அதன் பொருளாகிய பவளத்தை இங்குக் குறிக்காமல் வாயென்னும் இன்னொரு பொருளுக்கு ஆனமையால் அது இங்கு ஆகுபெயர். பவளம்போன்று இருக்கும் சம்பந்தம்பற்றி வாயைப் பவளமென்றே கூறியதால் அது ஆகுபெயரில் உவமை ஆகுபெயர்.

ஒண்சிந்து ரத்தைவெறுத் தூடும் பிடிவேழம்
விண்சிங்கங் கண்டணைக்கும் வேங்கடமே-யெண்சிந்
கோரா விருந்தா னொருநாள் விதுரனுக்கு [தைக்
வாரா விருந்தான் வரை. 7.

பதப்பிரிவு:—ஒண் சிந்துரத்தை வெறுத்து ஊடும் பிடி வேழம் விண் சிங்கம் கண்டு அணைக்கும் வேங்கடமே எண் சிந்தைக்கு ஓரா இருந்தான் ஒரு நாள் விதுரனுக்கு வாரா விருந்தான் வரை.

பதவுரை:—ஒண் - ஒளி பொருந்திய, சிந்துரத்தை- குங்குமத்தை, வெறுத்து - வெறுத்து, ஊடும் - ஊடுகின்ற, பிடிவேழம் - பெண்யானையானது, விண் - ஆகாயத்தில்எழும், சிம்மம்-சிம்மராசியை, கண்டு -பார்த்து, அணைக்கும் - ஆண்யானையை அணைத்துக்கொள்வதற்கு இடமாயிருக்கின்ற, வேங்கடமே - வேங்கடந்தான்,

எண் - எண்ணுகின்ற, சிந்தைக்கு - மனத்திற்கு, ஓரா - அறியப்படாமல், இருந்தான் - இருந்தவனும், விதுரனுக்கு - விதுரனுக்கு, ஒருநாள் - ஒரு காலத்தில், வாரா-வருதற்கு அருமையான, விருந்தான் - விருந்தாக வந்தவனுமாகிய திருமால் விரும்பியிருக்கும், வரை - மலையாகும்.

விரிவுரை:—ஆகாயத்தில் உள்ள சிம்மராசிக்கும், திருவேங்கடமலையி லுள்ள பெண்யானை கொண்ட ஊடல் தீர்வதற்கும் ஒரு சம்பந்தம் கற்பித்து, அதன் மூலமாய் அம்மலை மிகவும் உயர்ந்ததென்று புகழ்கின்ற அதிசயம் அடங்கியிருப்பதால் இச்செய்யுளில் உள்ள அணியும் தொடர்பு உயர்வுநவிற்சி அணியாம். நாயகி தன் நாயகன்மேல் தான் வைத்திருக்கும் அளவு ஆசை அவன் தன்மேல் வைத்திராமல் பிறமாதரை விரும்பியுள்ளான் என்று அறிந்துகொள்வதற்குக் காரணம் ஏதோ கண்டுவிட்டதாகக் கற்பித்து அவனோடு கோபங்கொண்டு சிறிது விலகி நடிக்கின்ற நிலை ஊடல் எனப்படும். இதனை முன் நளவெண்பாப் பாடத்தில் எடுத்து உரைத்திருக்கின்றோம் (வால்யூம் 1. பக்கம் 590) இப்படி ஊடல் கொண்டவளது கோபத்தை நாயகன் பலவாறு தணிக்க முயல்வான். கோபித்திருப்பவள் நெற்றியில் விளையாட்டாகத் திலகம் இடுவதும், அவளுக்குப் பூமாலைகள் சென்று சூட்டுவதும் செய்துபார்ப்பான். அவளோ வெஞ்சினம் மேன்மேலும் மூண்டெழுந்தவள்போல் இட்ட திலகத்தை அழித்துவிடுவதும், சூட்டிய மாலையைப் பிய்த்தெறிவதுமாக இருப்பாள். இந்நிலையில் சில நாயகன்மார் நளனைப்போல் அவள் காலில் விழுந்துவிடுவார். அப்படி விழுந்தும் ஊடல் தீராத மாதரும் இலக்கணையைப்போல் (வால்யூம் 1. பக்கம் 95) சிலர் இருக்கலாம். எனவே, "என் செயலால் ஆவது இனி யாதொன்றுமில்லை'' என்று ஏங்கிய வண்ணம் நாயகன் ஒரு புறமாகவும், தொண்டைக்கனி வாய் துடிப்ப நாயகி ஒருபுறமாகவும் தனித்திருப்பச் சிறிதுநேரம் சென்றபின் அந்நாயகியின் நெஞ்சில் இருந்த கோபம் தேய்ந்துதேய்ந்து மறுபடி நாயகனை அணைய வேண்டும் என்னும் ஆசையே மேன்மேலும் வளரும். ஆனால் அவன் காலைப்பிடித்தபோதெல்லாம் கருவித்திருந்துவிட்டு இப்பொழுது எப்படிச்சென்று அவனுடன் உறவுகொள்வதெனும் நாணத்தால் நைபவளாவாள். உள்ளத்திலிருந்த ஊடல் தீர்ந்ததாயினும் இனிச் சென்று அவனோடு கூடுவதற்குக் காரணம் கற்பித்துக் கொள்ளவேண்டியது அவளுக்கு அவசியமாகின்றது. ஏதேனும் ஒன்றிற்குப் பயந்தவள்போல் பாவித்து அவனை அணைத்துக்கொள்வது மிகவும் சுலபமான உபாயம். "காகம் 'கா' என்று கத்தியதாம், அகமுடையானைப்போய் அப்பாடா என்று கட்டிக்கொண்டாளாம்,'' என்று வழங்கும் வாசகம் இதுபற்றியே எழுந்ததாயிருப்பினும் இருக்கலாம். அந்தவேலைதான் இந்த யானை இங்குச் செய்தது. பெண்யானை தன் களிற்றுடன் ஊடல்கொண்டது. அவ்வூடலைத்தணிக்க ஆண்யானை இட்ட சிந்துரத்தையெல்லாம் பெண்யானை வெறுத்துவிட்டு விலகிவிடப் பிறகு கோபம் நீங்கியபின் மறுபடி அணைவதற்கு நாணி இருக்கவே, ஆகாயத்தில் சிம்மராசி வர, சிம்மம் என்ற சொல்லளவில் 'இதுதான் சாக்கு' என்றுபயங்கொண்டதுபோல் பாசாங்குசெய்து போய் அணைத்துக்கொண்டது.

குறிப்பு:—வாராத, என்றிருக்க வேண்டியது வாரா என்றிருப்பதால் அது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

இலக்கணம்.

இரண்டுவார்த்தைகள் ஒன்றையொன்று தொடர்ந்து வரும்போது அவை அர்த்தத்தால் எவ்வாறு சேருகின்றன என்பதை முன் தொடரிலக்கணத்தில் பார்த்தோம். இவ்வாறு தொடர்கின்ற மொழிகளில் முதலில் இருக்கும் மொழியை நிலைமொழி யென்றும், பின்வருகின்ற மொழியை வருமொழி யென்றும், அழைப்பர். சொற்கள் தொடரும்போது நிலைமொழியின் இறுதியில் உள்ள எழுத்தும், வருமொழி முதலில் உள்ள எழுத்தும் சேர்ந்து உச்சரிக்கின்ற ஒலியில் சில வேறுபாடுகள் உண்டாகலாம். அதாவது, நிலைமொழி யிறுதியிலேனும் வருமொழி முதலிலேனும் அல்லது இரண்டு இடத்திலுமேனும் உள்ள எழுத்துக்கள் சில மாறுபாடுகள் அடைவதுங் கூடும்; அல்லது அடையாமல் இருக்கின்றபடியே இருந்தாலும்இருக்கலாம்.(நிலைமொழி இறுதியிலும்வருமொழி முதலிலும்உள்ள எழுத்துக்கள் தவிர மற்றஎழுத்துக்களில்ஒன்றும் வேறுபாடுஅடையவேஅடையாது என்றுஎண்ணப்படாது. சிற்சிலசமயம் அவைகளும் வேறுபடலாம். இதைப்பற்றிப் பின்னுற் பார்ப்போம்).

இவ்வாறு இரண்டுபதங்கள் தொடரும்போது அவைகளிலுள்ள எழுத்துக்கள் என்ன ஆகும் என்பதைப்பற்றிச் சொல்கின்ற இலக்கணம் புணரிலக்கணம். வார்த்தைகள் அர்த்தத்தால் சேர்வது தொடரிலக்கணம்; அவை சப்தத்தால் சேர்வது புணரிலக்கணம். ஆனுல்,சப்தத்தால் அவை சேர்ந்து ஒலிக்கின்ற தன்மை, பெரும்பான்மை அவ்வார்த்தைகள் எவ்வித அர்த்தத்தால் தொடர்கின்றன என்பதை ஒட்டி இருக்கின்றது. ஒலிக்கின்ற ஒலியினுடைய குறிகள் தாம் எழுத்துக்கள் என்பதை மறவாதிருந்தால், தொடர்கின்ற சொற்கள் அடைகின்ற சப்தவேறுபாட்டிற்கு ஏற்றபடி எழுத்துக்களும் வேறுபாடுஅடையும் என்பது தெரியலாகும். இவ்வேறுபாட்டை இலக்கணங்களில் **விகாரம்** என்று அழைப்பர்.

பதப்புணர்ச்சிக்கு உரிய விகாரங்கள், தோன்றல் திரிதல், கெடுதல் என மூன்று வகைப்படும். வாட, பசித்த என்ற இரண்டு சொற்களைத்தொடர்ந்து உச்சரிக்கும்போது 'வாட ப்பசித்த'என வருமொழி முதலில் ப் என்ற ஒரு எழுத்துத் தோன்றியது. அப்படியே 'மேடத்தைப் பார்த்து' என்னும்போது ப் என்ற எழுத்து தோன்றியது. "கூடத்துக் கம்ப..." என்னும்போது "கூடம்+அத்து+க்+கம்ப......" என, அத்து என்னும் ஒரு சாரியையும், க் என்ற ஒரு எழுத்தும் தோன்றின, (கூடம்+அத்து, கூடத்து என்று எப்படியாயிற் றென்பதைப் பின்னர்ப் பார்ப்போம்). இவ்விதம் இரண்டு பதங்கள் புணரும்போது, ஒரு எழுத்தேனும், சாரியையேனும் அவ்விருசொற்களின் ஒலியைக் கூட்டிவைப்பதற்கு உதவியாய்த் தோன்றுமாயின், அவ்விகாரம் தோன்றல் விகாரம்.

திரிதல் என்பது, இரண்டுபதங்கள் புணரும்போது ஒரு எழுத்து வேறுஒரு எழுத்தாய் மாறிவிடுவதாகும். கல்+சட்டி, என்னும் இவ்விரண்டு சொற்களும் சேரும்போது 'கற் சட்டி' என்றாகும். நிலைமொழி இறுதியிலிருந்த ல் என்னும் எழுத்து, ற் என்று மாறிற்று. அப்படியே, முள்+செடி, முட்செடி என, ள் என்னும் எழுத்து ட் என்னும் எழுத்தாகத் திரிந்தது. இத்தகைய விகாரம் திரிதல்விகாரம். வெண்ணெய்க்கும்+செம்..........., என்று தொடரில் ம் என்னும் எழுத்து ஞ் என்னும் எழுத்தாகத் திரிந்து இருக்கின்றது.

பதங்கள் புணரும்போது எழுத்து இல்லாமலே மறைந்து போய்விடுமானுல், அது கெடுதல் விகாரம். மரம்+வேர், என்று சேரும்போது, நிலைமொழி இறுதியிலுள்ள ம் என்னும் எழுத்துக்கெட்டு 'மரவேர்' என்று நிற்கும். கம்பம்+வள...' என்றது 'கம்பவள' என்றானதும் ம் கெட்டதால்தான்.

குலசேகரர்,

[534-வது பக்கத் தொடர்ச்சி]

நடமாடுங் கோயில்

காரி னம்புரை மேனி நற்கதிர்
　　முத்த வெண்ணகைச் செய்யவாய்
ஆர மார்பன் அரங்கன் என்னும்
　　அரும்பெ ருஞ்சுடர் ஒன்றினைச்
சேரும் நெஞ்சின ராகிச் சேர்ந்து
　　கசிந்தி ழிந்தகண் ணீர்களால்
வார நிற்பவர் தாளி ணைக்கொரு
　　வார மாகுமென் நெஞ்சமே　7

[கார் இனம் - முகிற்கூட்டம்; கதிர் - ஒளி; நகை - பல்; செய்ய - சிவந்த; ஆரம் - மணிமாலை; சேரும் நெஞ்சினராகி - சேரவேண்டும் என்ற எண்ணமுடையராய்; சேர்ந்து -அவனை யடைந்து]

அறிவே ஒளி அழகே அருள்:—

முகிற் கூட்டங்களின் அழகினை எல்லாம் பிழிந்தெடுத்தாற் போலும் பேரழகுடையவன்: பேருளாளன். இரவெனக் கரியவனுய் நின்றானே? அவனது திருமேனியி னின்றும் ஓர் ஒளி பெருகி வழிகின்றது; அறிவு ஒளி பெருக்கெடுக்கின்றது. கதிரவனைக் கார்முகில் மறைத்ததேபோலும் திருமேனியின் ஒளியோடு திகழ்கின்றான். கதிரவன் ஒளிபோலக் கண்ணைக் குருடாக்கும் தீ ஒளியன்று இவ்வொளி; நூற்றுவர்க்கொல்லியொடு நூக்கியெறி பொறியும் கண்டுபிடித்து நூழிலாட்டிற் றிளைக்கும் நோயறிவு மன்று. பேயறிவு மன்று. இவனுடைய ஒளியோ கதிரவனினும் மிக்க ஒளியுடையதாயினும், கண்குளிரக் கண்டு களிக்கக் கூடியதாதலின் நல்லதோர் பேரெழில். எல்லோர்க்கும் இனியதாகப் பயன்படும் அறிவே இவனறிவு; எல்லோர்க்கும் சோறு போடும் அறிவு;கூறைதரும் அறிவு; மேலாம் இன்பத்தையூட்டும் அன்பாம் அறிவு. கருமணிபோலக் கதிர் விடும் கட்டழகன். அருளொடு பொலியும் அறிவன்.

கருமணிக்குள்ளே வெண்மணியும் உள்ளன. கருமையின் அருகில் வெண்மை மிக வெளுத்துத் தோன்றும்; வெண்மையின் அருகே கருமை மிகவும் கறுத்துத் தோன்றும். முரண்பட்டு நின்றன இவ்வகையில் ஒன்றிற்கொன்று உதவுதலும் முடிவான முதல்வனிடத்திலே முரண்பாடு முற்றும் அழிந்தொழிகின்றமையால் அன்றே. இவ்வுண்மையைப் புலவர் அறிவர்; அன்பர் அறிவர்; ஆதலின் அவர்கள் பகைவரிடத்தும் பண்ணவனைக் காண்பர். நிற்க, கருமணியின் ஒளியினிடையே வெள்ளிய பற்களின் நிலவொளியும் காணலாம். அவ் வெண்மணிகள் பதிந்த இடமோ செந்துகிரேபோலச் சிவந்து விளங்கும். திருவாய் மலர்தான். புன்னகை புரிந்தருளும் பொன் அரங்கனது பொற்பிலே இவ் ஏரெழிலனைத்தும் இனிதே விளங்குகின்றன. வெண்மையருகே செம்மையும்,செம்மையருகே வெண்மையும் நிறம்மிகப்பெற்று நிலவுகின்றன. மலைபோன்ற மார்பினிடத்தே அருவிபோல அரவின் மணிக்கோவை ஒன்று எழுந்து விளங்கி அவனது செல்வப்பெருக்கெனச் சிறந்து திகழ்கின்றது.

அறத்திற் கடிப்படையாய் இயற்கையான ஏரெழிலாய் விளங்கும் இறைவன் தன் அறிவோடிணைந்த அன்புநிலையும், அரவின் மணிக்கோவையில் தோன்றும் பொருணிலையும்; செய்ய வாயின் சீர்விளங்கும் திருநகையில் தோன்றும் திருவருட் பேரின்பநிலையும் கண்ட அன்பர்கள் அறம் பொருள் இன்பம் என்ற முப்பொருளும் முடிந்து ஒன்றான இடமே வீடென அறிவர் அன்றே? அவனே அரங்கன். துன்பமாகிய இவ்வுலகில் புழு முதல் புத்தேளிர்வரை உள்ளோர் அனைவரும் அடைய முயல்வதும் அடையாது வருந்துவதால் அருமையானதும் இன்பமேயன்றே? அரங்கன் அரும்பொருளாம் இன்பப்பொருள். (ஆனந்தம்) அவனே எல்லாமாகிப் பரந்து பெருகிநின்ற பெரும் பொருளாம் உண்மைப்பொருள் (சத்). அவனே அறிவுவடிவான சுடர்ப்பொருள். எனவே, அவனே உண்மையறிவின்ப மானவன்(சச்சிதானந்தம்). அத்தகைய உண்மையறிவின்பமான பொருள் ஒன்றன்றிப் பல இல்லை; பல இருப்பின் இப்பொருள் எல்லாவற்றையும் தன்னுளடக்கிநிற்றல் இல்லையாம்; அவற்றோடு முரண்பட்டுநிற்க வேண்டிவருமாதலின் இன்பமில்லையாம்; அனைத்தையும் அறியும் அறிவும் இல்லையாம். இவனே எல்லாமாய் நின்றபோது வேறொரு பொருளேது. அவனை அறிவது எங்ஙனம்? அன்புவடிவான நெடுகில் சுடர்விடும் அறிவு விளக்கால்தான் அறியலாம்.அன்பென்றால் என்ன? அவனை அடையவேண்டி விரும்புதல்; இவனை விட்டுப் பிரிந்திருக்க இயலாமை; அந்த நிலையில் இவனோடி உள்ளத்தே வந்து புகுகின்றான். நெஞ்சுருகி மகிழ்வாரது மனமலர்மிசை ஏகினுன் இவனே யன்றோ? இவனைச்சேரவேண்டும் என்ற விருப்பத்தோடு இவனை நெஞ்சிலிருத்தி நினைந்து நினைந்து, நினைவால் இவனை அடைந்து தம்மனத்தாமரையில் இம்மாலவனை வீற்றிருக்கச்செய்தபோது அவர்கள் உடல் கசிந்து, உள்ளம். கசிந்து ஒப்பற்ற இன்ப உருவாவர். இன்பமானது உடலிற் கசிந்து உடலில் விளங்கும். கண்ணிற் கசிந்து கண்ணீராய்ப் பெருகி வழிகின்றது. அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ். ஆர்வலர் புன்கணீர் பூசல்தரும். இவ்வாறு நீதில் நன்னெறியில் நிலைநின்ற பெரியோர்களது தாளிணையையே என் நெஞ்சம் போற்றுகின்றது. இன்புறவாகி அன்பாம் கண்ணீர் பெருக்கும் அடியவரது திருவடிக்கே ஒப்பற்ற அன்புடையதாகின்றது என் நெஞ்சு. ஆண்டவனைக்கண் டன்படைதல் அடியவர் இயற்கை; அடியாரைக் கண்டு அன்படைதல் அடியேன் இயற்கை.

மாலை யுற்ற கடல்கி டந்தவன்
　　வண்டு கிண்டு நறுந்துழாய்
மாலை யுற்ற வரைப்பெ ருந்திரு
　　மார்வ னைமலர்க் கண்ணனை
மாலை யுற்றெழுந் தாடிப் பாடித்
　　திரிந்து அரங்கன் எம்மானுக்கே
மாலை யுற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு
　　மாலை யுற்றதென் நெஞ்சமே.　8

[1. மாலைஉற்ற - களிப்பினுல் கலக்கமுற்ற, கடல் - அலை எறிகிற கடல்; 2 துழாய் மாலை, உற்ற - பொருந்திய; வரை - மலைபோன்ற: 3 மாலைஉற்று - மையல்கொண்டு; 4 மாலையுற்றிடும் - பித்தேறும்; 5 மாலை உற்றது - விரும்பியது]

பாற்கடலில் பள்ளிகொள்கின்றான் இன்பமலையான இறைவன். இவனுடைய வடிவம் பட்டவளவில் உள்நிலைமாறிக் களிப்பேறி உகளிப்பை அடைகின்றது அப்பெருங்கடல். இருக்கும் இடத்திற்கும் இன்பந்தந்து இன்பமாய் இருக்கின்றான். அவனே அவ்வின்பத்தையும் பெறுகின்றான்; அவ்வலையாட்டமே தொட்டிலாட்டமாகத் தூங்குகின்றான். மலைபோன்று அளக்கலாகா அளவும் பெருமையும், துளக்கலாகாத் தோற்றமும் உடையதாய்ப் பெருத்த மார்புடையான்; மார்பெனும் குன்றில் குன்றிட்ட விளக்காய்த் திருமகள் இன்பக் கூத்தாடி நிற்கின்றாள். மலையின் முடியைச் சூழ்ந்து மரநிழலில் மறைந்தோடும் அருவிபோலப் பச்சைத்துழாய்ப் படலை மார்பில் விளங்குகின்றது; நறு நாற்றத்தை நாற்பாலும் வீசி, நலம்புரி கொள்கையோடு நகை செய்கின்றது. வாய்க்கினிய தேனை உண்ண வண்டுகள் வந்து செவிக்கினிய பண்களைப் பாடி அத்துழாயைக் கிண்டுகின்றன. என்றோ அணிந்த துழாய்மாலை இன்றும் இவ்வாறு பொலிவது இவனுடைய சேர்த்தியாலன்றோ? கண்ணுக்கினிய பசுமையும், வாய்க்கினிய தேனும், காதுக்கினிய வண்டின் பாடலும், வண்டினையழைக்கும் மெய்க்கினிய மென்மையும், தண்மையும், முகர்தற்கினிய நறுமணமும், வாடா இளமையும் பெற்று இறைவனோடு சேர்ந்தின்புறுவதால் அன்றோ இறைவனும் இதனுல் இன்பமடைகின்றான். திருமகளும் இவனோடு சேர்ந்து குன்றிட்ட விளக்காகின்றாள். மற்றைய இடத்தோ அறத்தோடும் அன்போடும் வாராப்பொருள் எனப் பழிக்கின்றனர். திருமகளுக்கு இன்பந்தந்து அவளோடு கூடி இவனும் இன்புறுகின்றான். அன்பு வாழ்க்கையில் இருதலையும் அன்றோ இன்பமும் அன்பும் ஒத்திருக்கும். அறிவிலாப் பொருள்களும் கடல்போல இவனுடன் அன்புவாழ்க்கையில் இணைந்து இன்புறுகின்றன; ஓரறிவுயிராகிய துழாயும் அங்ஙனமே. எல்லாமறிந்த கடவுளாகிய திருமகளும் அங்ஙனமே; இவ்வாறு தன்னைச் சேர்ந்தாருக்கும் தான் நின்ற இடத்திற்கும் இன்பந்தந்து இன்பம் பெறுவானது இன்பமெல்லாம் குடிகொண்டிருப்பது இவனுடைய செந்தாமரை போன்று அருளோடு மலர்ந்து அறி

வோடு ஒளிரும் கண்ணேயாகும். அன்பர்கள், இவ்வழகிய கண்ணையும், அருட்பெருந் தாய் அன்புடன் ஆடு மார்பினையும், இவனுடைய திருமணத்தோடு இங்கு வந்த திருத்துழாயினையும், இன்ப அறிவாய்ப் பாற்கடலில் பள்ளிகொண்ட நிலையினையும் அறிவிலாப் பொருளிடத்து அணைந்து நின்று இன்பூட்டி இன்பமடையும் இன்பநிலையினையும் என்றும் அடியார்கள் எண்ணுவர். எண்ணியபோது மையல் கொள்வர். இன்பமடைவர். இன்பப் பெருக்கால் இருந்த இடத்தில் இருக்கப்பெறுமல் எழுந்து ஆடுவர், பாடுவர். எங்கும் திரிந்து இவ்வின்பவாழ்வை வாழ்ந்து காட்டிப் பண்ணவனை எண்ணுதபழியுடையாரையும் அன்பு வழியினிற் செலுத்துவர். நம்மை நோக்கி அருள் செய்யத் திருவரங்கத்தே குடிபுகுந்து, எளிமைகாட்டி என்னை எழுதிக்கொண்ட இத்தலைவனுக்குப் பித்தேறித் திரிவர். அத்தகைய தொண்டரது மாறுபெரு வாழ்வினையே என்மனமும் விரும்புகின்றது. இறைவனோடு ஒன்றுதலைவிரும்பாது இறைவனை வழிபட்டு எல்லா உயிர்களுக்கும் இனியன செய்தொழுகும் இத்தொண்டர்போல வாழ்தலையே என்நெஞ்சம் விரும்புகின்றது.

மொய்த்துக் கண்பனி சோர மெய்கள்
சிலிர்ப்ப ஏங்கி இளைத்துநின்று
எய்த்துக் கும்பிடு நட்ட மிட்டெழுந்
தாடிப் பாடி இறைஞ்சிஎன்
அத்தன் அச்சன் அரங்க னுக்கு
அடியார்க ளாகிய வருக்கே
பித்த ராமவர் பித்த ரல்லர்கள்
மற்றையார் முற்றும் பித்தரே. 9.

[எய்த்து - தளர்ந்து; கும்பிடு நட்டம் இட்டு - தலைகீழாகக் கூத்தாடி]

இறைவனையே எண்ணி இன்புறும் அடியார்கள் தமது இன்பம் பெருக்கெடுத்தோடுவதால், உயிர்க்கொரு தனிவழியாகிய கண்ணின் புரைபுரை தோறும் அவ்வின்ப வெள்ளம் கசிந்து வழிந்து இன்பக் கண்ணீர்த்துளிகள் கண்ணிறைய மொய்த்துக்கொண்டு என்றும் முந்துறுகின்றன. மனம்வெதும்பி அழுந்தோறும் கண்ணீரும் வெதும்பி வெந்நீராக வருகின்றது. உள்ளம் குளிர்ந்தபோது இன்பத்தால் வரும் கண்ணீர் பனிநீர்போலத் தண்ணென்று பாயும். உடலனைத்தும் மயிர்க்கூச்செறிய நிற்கின்றனர். இறைவனையே எண்ணிய இன்ப மேலீட்டால் அவர்கள் மனம் ஏங்குகின்றது. உடல் இளைக்கின்றது. தனி நிற்கின்றனர் அடியவர்கள். அந்நின்ற நிலையும் தளர்ந்து மெய்ம்மறந்து கும்பிடுகூத்தாடுகின்றனர். தலைகீழாகக் கூத்தாடிச் சிறிது எழுந்து நிற்கின்றனர். இன்பம் மேலும் பெருகுதலின் இன்பத்தால் ஆடுகின்றனர்; இவனது புகழைப் பாடுகின்றனர். இவன் பெருமை எண்ணி இறைஞ்சி வணங்குகின்றனர். இவ்வாறு - என் அப்பன் - என் தலைவன் - எம்மை நோக்கி வந்த அரங்கன் - இவனுக்கு அடியார்களாகிய தொண்டருக்குப் பித்தேறியவர் பித்தர் அல்லர் ["அடியார்களாகியவருக்கே'' என்ற இடத்தில் "அடியார்களாகி அவனுக்கே'' என்ற திருத்தம் காணப்படுகின்றது. இத் திருமொழியில் இறைவனுக்குப் பித்தேறுவதைக்கூறுது, அடியார்களாகியவருக்குப் பித்தேறினவரையே கூறுகின்றமையால் முதல் கூறியதையே கொண்டு இங்கு எழுதுகின்றோம். இறைவனிடம் பித்தேறுவதினும் இவர்களிடம் பித்தேறுவதையே ஆழ்வார் இங்குப் பேசுகின்றார்] இந்தப் பித்தே பேறிவும் பேரின்பமும் ஆதலின் இத்தகைய பித்தேறுதவர்களே உண்மையில் பித்தர்கள்.

* * *

இவ்வளவும் படித்தமையாலேயே குருபரம்பரை கூறும் கதை நம்பத்தகுந்ததாகின்றது. இத்திருமொழியை அடிப்படையாக வைத்துத்தான் இக்கதையை எழுதினார்களோ என்று ஐயமும் எழுகின்றது. இவ்வளவும் கூறிய பின்னரும் இதனை நம்பாதவர்கள், ஆழ்வார் தாமே தம்வாயால் "அடியார்க் கடியேன்'' எனக் கூறிக்கொள்வதைக் கேட்டுத் தெளிவாராக.

அல்லி மாமலர் மங்கை நாதன்
அரங்கன் மெய்யடி யார்கள்தம்
எல்லை யிலடி மைத்தி றத்தினில்
என்றும் மேவு மனத்தனும்
கொல்லி காவலன் கூடல் நாயகன்
கோழிக் கோன்குல சேகரன்
சொல்லின் இன்தமிழ் மாலை வல்லவர்
தொண்டர் தொண்டர்க ளாவரே. 10.

ஆழ்வார் தமது திருமொழியைக் கூறுகின்றவர்களுக்கு என்னபயன் கூறுகின்றார். எல்லாப் பயன்களினும் சிறந்த பயனையே இப்பாட்டில் கூறுவது இயல்பாதலின் இங்கேதான் அவர் நோக்கத்தினை ஆராய்தல் வேண்டும். என்னபயனை எடுத்துரைக்கின்றார். சொற்களிலே இனிமையுடைய இத்தமிழ்ப்பாடல்களின் கோவைகளைப் பொருளுணர்ந்து ஓதவல்லவர்கள் தொண்டர் தொண்டர்கள் ஆவரே என உறுதி கூறுகின்றார். பாட்டின் பயனை உணர்ந்தவர் உறுதி கூறத் தடை என்ன? பாட்டினைப் படித்த நாமும் அம்முடிவினிற்கே வந்துள்ளோம். இப்பாடல்கள் யார் பாடியன. ஏழை பாடியனவோ? சோற்றுக்கில்லாமல் அடியாரோடுகூடி வயிறு வளர்க்க வந்தவன் பாடிய பாடல்களோ! அல்ல அல்ல. எல்லோரும் தனக்கு அடிமையாய் இருக்கும் அரசரன்றோ அடியாருக்கு அடியாராக அவாவுகின்றார். கொல்லிமலையுள்ள சேரநாட்டுக்கும் தலைவர்; கூடல் என்ற மதுரையைத் தலைமையாகக்கொண்ட பாண்டிநாட்டுக்கும் தலைவர்; கோழி என்ற உறையூரைத் தலைமையாக கொண்ட சோழநாட்டுக்குந் தலைவர்; என்னவே தமிழ்நாட்டிலேயே தனித்தலைமை பூண்ட அரசர் பெருமானார். அரசநிலையின் உயர்வினை அடைந்த ஒருவரே அடியவர்க்கடிமையாக விரும்பினுல் அடியவர் பெருமையை என்ன என்பது! எதனை நாடி நிற்கின்றார் குலசேகரர். நெஞ்சார நினைந்து நிற்பது அடியவருக்கு அடிமைசெய்வதுதான். எப்போதேனும் ஒருபோது அடிமைசெய்தால் இவர் மனம் இன்புறுமோ? இன்புறுது. என்றும் அவ்வடிமைத் திறத்தில் மேவு மனத்தர், போலியடியாரைப் புறக்கணித்து மெய்யடியாரையே வேண்டிநிற்பர். அம்மெய்யடியாரிலும் அல்லிமாமலர் மங்கையாகிய அருட்பெருந்தாயின் தோளினைத் தோய்ந்த அறிவாளனையே தொழும் அடியாருக்கே அடியார் ஆவர். அருளொடு புணர்ந்தானை எண்ணினுல்தான் உலகத்தவர்பாலும் அருள் பூண்டு ஒழுகுதல் கூடும். மெய்யடியார் மேல் ஆழ்வார் கொண்ட அன்பு எத்தகையது? அடியார்களோடு சேய்மையாகிய தொடர்பிருந்தாலும் அத்தொடர்புடையாரது திருவடியில் நெஞ்சாரப் பணிந்தடிமை செய்வார். எல்லையிலடிமைத்திறம் என்கின்றார் ஆழ்வார். "அடியார் அடியார் தம் அடியார் அடியார்தமக்கு அடியார் அடியார்தம் அடியார் அடியோங்களே'' என்றபடி பாடி அடிமைத்திறத்திலழுந்திய பற்றுடையவர்.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

14. வரைக்காட்சிப் படலம்.

உண்பதுவு முறங்குவது மூனின தூனம்.

விழைவுற விளங்கும் பல்வளம் பொதுளிக் கெழு
மிய வரையின் கிளரிசைச் செல்வம் எழுதரக்
கேட்டு யாரே மயங்கார். சயிலச்
536 பக்கத் தொடர்ச்சி
சாரல் வயின்வயின் செல்லுழி, காந்
தருவதத்தையார்பால் வசையில்
நெறிமுறை யிசைபயின் றளரென,
செங்கயலனைய நாட்டஞ் செவியுறு முறுவல்தோன்று
பொங்கிருங் கூந்தல்சோரா புருவங்கண்நெரியா பூவின்
அங்கையு மிடறுங்கூட்டி நரம்பளைந் தமிர்தமூறும்
மங்கையர் பாடல்கேட்டுக் கின்னர மயங்குமாதோ.

[சிவந்த கயல்மீனைப்போன்ற கண்கள் செவிவரையில் புரண்டு அலையாமலும் பற்கள் தோன்றுமலும் பொங்கி மிகுந்த கூந்தல் அவிழ்ந்து சோராமலும், புருவங்கள் நெரியாமலும் மாதர் அமைதியான நிலையில் இருந்து, மலர்போன்ற தம் அழகியகையையும், குரலையும் கூட்டி யாழின் நரம்பினை அளைய அதனின்றும் ஊறும் அமிர்தம்போன்ற பாடலைக் கேட்டு (இசைநுணுக்கம் நன்குமதிக்கும் பறவையாகிய) கின்னரங்கள் (தம்மினத்திலன்றி இவ்வகைச் சுவையுடைய இசை சேர்க்கவல்லாருளரோ வென) பிரமித்துநிற்கும்]

கின்னரமுதல் யானையீறுக யாவும் இன்னியல் நலங்கள் நேர்ந்து இயங்குமத் திங்களஞ் சிலம்பின்கண் வந்து தத்தம் ஊர்திகளினின்று மூலைசில அநங்கனன்னர் புயத்தொடும் பூட்ட விறங்கியபின்,

நடிக்குமயி லென்னவரு நவ்விவிழி யாரும்
வடிக்குமயில் வீரரு மயங்கினர் திரிந்தார்
இடிக்குமுர சக்குரலி னெங்குமுரல் சங்கின்
கொடிக்களி னுணர்ந்தரசர் கோநக ரடைந்தார்.

[மான்போன்ற மருண்ட விழியோடும் நடனமாடுகின்ற மயில்போல் வரும் மாதரும், வடித்த வேல் ஏந்திய வீரரும், எங்கெங்கும் ஒலிக்கின்ற முரசொலியாலும் சங்கின் முழக்கத்தாலும் தத்தமக்கு அமைத்திருக்கின்ற படமாடங்கள் எவையென்று முதலில் உணரமாட்டாது திரிந்து பிறகு தம்முடைய கொடிகள் கட்டியிருக்கும் அடையாளத்தால், அறிந்துகொண்டு தத்தம் இராஜகிரகங்களை அடைந்தார்]

அடைந்தவுடன் அங்கு அவர்செய்த முதற்கருமம், அன்று செய்தோர்க்கும் செய்தவதனை இன்று உன்னுவோர்க்கும் ஒருங்கே இன்பம் பயக்குவிக்குந் தன்மைத்து. சித்திரச் செயல்கள் எஞ்ஞான்றும் ஏமாப்புடையன. அதனை யுணர்ந்த கம்பர்

மிதிக்கநிமிர் தூளியின் விளக்கமறு மெய்யைச்
சுதைக்கணுரை யைப்பொருவு தூசுகொடு தூய்தா
உதிர்த்தன ரிளங்குமர ரோவியரி லோவம்
புதுக்கின ரெனத்தருண மங்கையர் பொலிந்தார்.

[யானை குதிரை முதலியன மிதித்ததால் எழும்பிய தூசி படிந்து ஒளிமங்கிய தம் மாதர்களது மேனியை இளங்குமரர், சித்ரகாரர் படம் சிலை முதலியவற்றில் படிந்த தூசியை அருமையாய் விலக்குவதுபோல், பாலின் நுரைபோன்ற தம் துல்லிய மெல்லிய அங்கவஸ்திரங்களைக்கொண்டு தூய்மையாகத் தட்டினர். சித்திரகாரர் தம் மனைச் சித்திரங்களைப் புதுப்பித்தாரென இளமங்கையர் பிரகாசித்தனர்]

இவ்வாறு படமாடங்களுக்குள் மாதர்கள் தூசு நீங்கிய தோற்றத்தைக் கம்பர் வருணிப்பார்.

தூசினெடு வெண்பட முடைக்குடில்க டோறும்
வாசநகை மங்கையர் முகங்கள்மழை வானின்
காசின்மதி யின்கதிர் வழங்குநிழ லெங்கும்
வீசுதிரை வெண்புனல் விழுங்கியன போலும்

[துணியால் ஆகிய அந்த நீண்ட வெண்மையான கூடாரமனைகளில் எல்லாம், இயற்கை மணமமைந்த பற்களையுடைய மாதர்களது முகங்கள், மேகத்தையுடைய ஆகாயத்தின்கண் உள்ள களங்கமற்ற சந்திரனது ஒளியால் உண்டாகும் பிரதி பிம்பங்கள், வீசுகின்ற அலைகளையுடைய வெண்மையான பாற்கடலுள் தோன்றுவன போன்றன.]

தமது உயிரிற்கே உற்றவோர் மாசினை நீக்கினரென மைந்தர் தம் காதல்மங்கையர் மீது படர்ந்த துகளை உதிர்த்துப் புதுமையுறப் பொலிவவர்க் கிழைத்தபின் பாற்கடலனையவப் படமாடங்களில் வைகிய அவர், "வழி வருந்தினோம், உண்ணுதற் கேதுளது, பருகுதற்கேதுளது'' என விரைந்து நாடினு ரலர். மற்று,

துகிலிடை மடந்தையரொ டாடவர் துவன்றிப்
பகலிடைய வட்டிலின் மடுத்தெரி பரப்பும்
அகிலிடு கொழும்புகை யழுங்கலின் முழங்கா
முகில்படு நெடுங்கடலை யொத்துளதம் மூதூர்.

[அந்தப் படமாடங்களில் மடந்தையரும் ஆடவரும் நெருங்கிப் பகற்போது இது வென்று தோன்றுதபடி, தூபக்கால்களில் தீக்கொண்டு அகிலை எரிக்கும் செழித்தபுகைகள் அடர்ந்திருப்பதால், அம்முதிய ஊரானது, மேகங்கள் தோய்கின்ற பெரிய பாற்கடலை ஒத்தது]

என்று அகிற்புகை அளாவினுரன்றிக் கம்பர் அடு சோற்றில் அவ்வரசச்செல்வரைத் துளாவவைத்திலர்.

இது தக்கதே. உண்ணுவதென்பது மக்களுக்கும் மாக்களுக்கும் உள்ள தொடர்பின் பொதுமையை இடையறுது குறித்துநிற்கும் ஓர் செய்தியாம். உணவைப்போல் உறக்கமும் உடலிற்கியன்ற கருமமேயாதலால் இன்னவைகள் தம்முடைய உலகத்தில் இருக்கின்றன வென்று கவியுணர்வுடையோர் பலபட வெடுத்துக் காட்டமாட்டார். இரவு வந்துற்றபோது இச்சயிலத்திருந்த சேனையுள்ளோர் இன்துயிலமர்ந்தனர் என்னுது கம்பர்,

உண்ணு வமுதன்ன கலைப்பொரு ளுள்ளத் துண்டும்
பெண்ணு ரமுதம் மனையார்மனத் தூடல் பேர்த்தும்
பண்ணூர்ந்த பாடல் செவிமாந்திப் பயன்கொ ளாடல்
கண்ணுனனி துய்க்கவுங் கங்குல் கழிந்த தன்றே.

[வாயால் உண்ணப்படாத அமிர்தம்போன்ற கலைகளின் நயங்களைத் தம் உள்ளத்தால் உண்பதிலும், பெண்களில் அமிர்தம்போன்ற காதலியர் மனத்திலுற்ற ஊடலைத் தீர்ப்பதிலும், பண்ணமைந்த பாடல்களைச் செவியால் அருந்தி அனுபவிப்பதிலும், அப்பாடலின் பொருளைத் தெரிவிக்கின்ற ஆடல்களைக் கண்ணால் இனிது கண்டு அனுபவிப்பதிலும் அவ்விரவு அவர்களுக்குக் கழியலாயிற்று]

என்றே இயற்கையாய நித்திரையை நீத்தவோர் நிலையின் நிகழ்ச்சிகளைக் கூறுவார். இதனால், அவ்வனிகம் போல் கலைஞர்உலகத்திலுள்ள எனையோரும் உண்பதும் உறங்குவதும் எந்நாளும்செய்திலர்என்பதன்று கருத்து. இவைகளும் இவைகளுக்குரிய பிறதொழில்களும் 'அவசியம்' என்று எல்லோராலும் கருதப்படுபவை. அவசியமானவை யாவையாயினும் அவை தாழ்ந்தவைகளே. நமது நல்வாழ்க்கைக்கு அவசியம் என்ற பான்மையில் கொண்டாடப்படுங்கால் கடவுளும் பலபடி தாழ்ந்து விடுகின்றது. அவசியமில்லாதவொன்றை அழகுபற்றி அனுபவிக்கப் பயில்கின்ற செவ்வியிற்முன் மேன்மையுளது. இஃதுணர்ந்த புலமையோர் தம் நூல்களில் அவசியமானவைகளை அமைத்துப் பாராட்டாமல் மறைத்துவிடுவார். மாதர் துயில்வதெல்லாம் பெரும்பான்மை பொய்த்துயிலாயிருக்கும். கனவெனும் நலத்தைக் காட்டுவதற்கல்லால் அவரைக் கண்மூட வையார். புறப்பொருள் துறைகளை நோக்குங்கால், வீரர் இடுகின்ற போர்களெல்லாம் அவசியமென்னும் பொருளற்றவாய் வீண்போர்களாகவே புரியப்பெறும். அவசியத்திற்கென்று

அலைதலனைத்தும் வீணிற்குழல்வதே. அவசியமற்றனவென எண்ணுதற் கொத்தவைகளுக் கவாவி அனுபவிக்கக் கற்றவோர் அரியநிலை உற்றவரே உய்ந்தார்.

இதற்கிணங்கி, கவிகள் பரப்பிய ஆவணங்களைக்கண்டக்கால் அங்கு யாவும் அவசியமற்ற பொருள்களை புலப்படும். உண்பதற்கும் உடுப்பதற்கும் இன்றியமையாச் சிறுமைகளை நம் கவிவரர் வாய்ப்பிறந்த வணிகர் விற்கமாட்டார்.

சந்திரசயிலத்தில் இவ்வணிகவெள்ளம் வந்துற்றவப்பகல், சிற்சிலர் துகில்மாடங்கள் அமைக்கவும், சிற்சிலர் களிறு புரவி முதலியவைகளை நிரையிற்கட்டவும் ஆக, வேறு சிலர் "ஆர்கலி நிரைத்ததென ஆவணம் நிரைத்தார்" என்றனர் கம்பர். அக்கடைகளில் விற்பதற்கமைந்த பொருள்கள் இன்னவையென அவர் இங்குக் குறிக்கவில்லையாயினும், தெய்வயானையம்மையின் திருமணங்காணிய எழுந்துசென்ற முசுகுந்தன் பரிவாரத்தினோர் ஓர்வரையினைச் சேர்ந்தபோது கச்சியப்பசிவாசாரியார்,

முத்தமுந் துகிரும்பொன்னு முழுமணிக் கலனுஞ் [சந்தும்
சித்திரப் படமு மற்றுந் தெற்றிமேல் நிரைத்துச்
உத்தம வணிகர் உற்றார்.................... [சீர்சால்

என்றுரைப்பதால் வீணென்ற பொருள்களே விற்கப்படும் என்பது தெரியலாகின்றது. வழியினில் உடன் வரும் அவசரக் கடைகளுக்கே இவ்வீண்பொருள் வர்த்தகம் உரியதென் றெண்ணவேண்டா. தயரதன் சேனையுளோரிவர் சென்று சேரும் மிதிலைமாநகரினும்,

வரப்பறு மணியும் பொன்னும்
ஆரமும் கவரி வாலும்
சுரத்திடை அகிலும் மஞ்ஞைத்
தோகையும் தும்பிக் கொம்பும்

பரப்பிய ஆவணங்களே பலவுங் காண்பார். அளகையுந் தோற்றுப்போகும் அங்காடி வளமமைந்த அயோத்தியின் கடைகளும் இவையனையவைகளேயே நிறைத்திருத்தல்வேண்டும். சுரமைநாட் டணிநகராய பொன்னவிர் புரிசைவேலிப் போதனத்திலும்,

பளிங்குபோழ்ந் தியற்றிய பலகை வேதிகை
விளிம்புதோய் நெடுங்கடை வீதி வாயெலாம்
துளங்குபூ மாலையுஞ் சுரும்புந் தோன்றலான்
வளங்கொள்பூங் கற்பக வனமும் போன்றதே.

[பெரிய கடைவீதியில் எல்லாம், ஸ்படிகக் கற்களைப் பிளந்து செய்த பலகைகளையுடைய மேடைகளின் விளிம்பில் பொருந்தி அசைகின்ற பூமாலைகளும் வண்டுகளுந் தோன்றுவதால், அக்கடைவீதி வளமைமிகுந்த கற்பகச் சோலையை ஒக்கும்]

என்னும் ஆற்றால் தோலாமொழித்தேவர், வேண்டுவோர்க்கு வேண்டியனயாவுந் தருகின்ற வர்த்தகம் பூமாலையன்றி, வாழ்நாளுக்கு அவசியமெனக் கருதப்படும் பொருள்கள் ஆகா என்பதைக் காட்டுகின்றார்.

ஆதலின் புலவர்கள் பெரும்பான்மை அழகிற்கியன்ற பொருள்களைப் புகழ்பவராகி அவசியமென்ற செய்திகளை விடுத்துச்செல்வதே நெறியெனக் கொண்டுளர். உடலை அதனளவு போற்றுவதென்பது அவர் கருத்திற்கிசைந் தமைவதில்லை. உணவு அருந்துதல் என்னுமோர் செய்தியை உரைக்கவருமிடத்திலும்,

முந்துமுக் கனியி னுடை
முதிரையின் முழுத்த நெய்யிற்
செந்தயிர்க் கண்டங் கண்ட
மிடையிடை செறிந்த சோற்றில்
தந்தமி லிருந்து தாமும்
விருந்தொடுந் தமரி னோடும்
அந்தண ரமுத ருண்டி
யயில்வுறு மமலைத் தெங்கும்

[முக்கனிகளும் பருப்பின் வகைகளும் நெய்யுந் தயிருமாய் விருந்தினரோடுங் கிளைஞரோடும் சேர்ந்தது அந்தணர் தம்தம் வீட்டிலிருந்து அமிர்தம்போன்று இனிதாக உண்ணுகின்ற ஆரவாரத்தை உடையது கோசலதேசம்]

என்று கம்பர் விருந்தோடுண்ணும் செவ்வியையே விளக்க வேண்டுவார். அஃதன்றியும், போனகப்பிரயரெனப் பேர்பெற்ற அந்தணர்களையே அமலையோடு அயில்தற்கு அமைத்த சூழ்ச்சியுந் தக்கதாயிற்று.

அந்தணரல்லா இவ்வரசமாந்தர் இனியிங் குண்பதற்கிருப்பது இனிய நறவேயன்றி உணவென்னும் அவசியத்துளடங்கிய நெய்யுஞ் சோறு மல்லாததை உண்டாட்டுப்படலத்திற் காண்போம்.

எனின், இவ்வரையின்கண் வந்திறங்கிய அம்மேன்மையோர் அகிலாவி உயிர்ப்பதற்கே அவாவினர். இவ்வகைத் துகளறத் திகழும் மேனியராய் அகில்கமழுந் துகிலறை யமர்ந்து சிலமாதரார் கழங்காடலாகின்றனர். அன்னவரை, வெளிப்புறம் நடமாடுங் காளைவீரரிற் சிலர் கூடாரத்துணிகளின் புரைவழி கரந்து நோக்குதல் நேர்ந்ததுபோலும். நோக்கிய இவர் கண்ட தோற்றத்தினைக் கம்பர்,

விழுந்தபனி யன்னதிரை வீசுபுரை தோறும்
கழங்குபயின் மங்கையர் கருங்கண் மிளிர்கின்ற
தழங்குதளி சிந்திய சலம்பயி றரங்கத் [ன்ன
தெழுந்திடை பிறழ்ந்தொளிர் கொழுங்கயல் களெ

[ஒலிக்கின்ற திவலைகள் சிதறுகின்ற கடலினது அலையில் எழுந்து புரண்டு விளங்குகின்ற கொழுத்த கயல்மீன்களைப் போல், பெய்கின்ற பனிபோலத் தோன்றும் திரைச் சீலைகளில் காற்று வீசுவதால் உண்டாகும் சந்துகளிலெல்லாம் கழங்கு ஆடுகின்ற மங்கையர்களது கருங்கண்கள் பிரகாசிக்கின்றன]

என, நோக்கினவர்களில் தானுமொருவர் ஆனார்போல் சித்தரந் தீட்டுகின்றார். இன்னதன்பின்,

குயிலொடு மினிது பேசிச்
சிலம்பொடு மினிது கூவி
மயிலினந் திரிவ தென்னத்
திரிந்தனர் மகளி ரெல்லாம்

என்று இவ்வனிதையர் ஒல்கியொல்கி நடையெலாம் நடனமேயாக ஒதுங்கினர் எனக் கம்பர் கூறினரேனும் அம்மயில்களோ வேறோர் கருத்துடையனவா யிருந்தன. ஏனெனில்,

கொவ்வை நோக்கிய வாய்களை யிந்திர கோபம்
கவ்வி நோக்கின வென்றுகொல் காட்டின மயில்கள்
நவ்வி நோக்கியர் நலங்கொண்மேகலைபொலஞ் சாயல்
செவ்வி நோக்கின திரிவன போல்வன திரிந்த

[இதன் அழகைத் தாம் கற்கவேண்டுமென்று கொவ்வைக்கனிகள் பார்த்திருந்த வாய்களை இப்பொழுது தம் பலப்பூச்சிகள் கவ்விக்கொண்டு கற்கலாகின்றன வென்று நினைத்தோ, காட்டிலுள்ள மயில்கூட்டங்களும் மான் போன்ற பார்வையையுடைய மாதர்களது அழகுபொருந்திய மேகலையணிந்த பொன்மயமான சாயலின் செம்மையை நோக்கி அதனைத் தாம் அடையமுயன்று திரிவன போல் அவர்பின்னே திரியலாயின]

என்னுமாற்றால், மயில்போல் மாதர் திரிந்தனரென நாம் நினைக்க, இம்மாதர்போல் தாம் திரிந்தால் போதுமென அம்மயில்கள் நினைக்கலாயின என்பது தெரிகின்றது. மயிலும் மாதரும் கவின்கொள் சாயல்பெற்றவர்; அணிநடை இழைக்கக்கற்றவர்; நல்லாரை நல்லார் நாடுகின்றனர், கற்றாரைக் கற்றார் காமுறுகின்றனர். கற்றவர் இருவர் எதிர்ப்பட்டால் தத்தமில்மிக்கார் பிறர் என இருவரும் தனித்தனி எண்ணுவார். கல்லாதார் கருமங்கள் இதற் கெதிர்நிலைக் கருத்தினுல் தருக்கப்பெறும்.

ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேராவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செப்புந் நுன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச் சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

முருகன் ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கட ரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்த நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும்

விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பின் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0–12–0. வி. பி. செலவு வேறு

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

NATIONAL BOOKS
AT HALF PRICE AND LESS.

	Price—Original Rs.	A.	Reduced Rs.	A.
Duties of man, Mazzini ...	0	12	0	6
My Jail Expeiences, by Mahatma Gandhi ...	0	12	0	6
Young India 1919-1922 ...	4	0	3	0
Significance of Indian ... Nationalism, by H. M. Howsin ...	2	8	1	0
India's Challenge to civilization, by H. M. Howsin.	2	0	1	0
Gandhi and Anarchy, by Sir Sir C. Sankaran Nair ...	1	8	0	12
Revolutionary Bisgraphies by R. W. Postgate	1	8	0	8
Philosophy of Non-co-operation, by Bhagavan Das M A.	1	0	0	8
The Pluncer of India's Wealth, G. V. K. Rao ...	1	0	0	8
Indian Industrialism, by G. V. Ganapathy Aiyar...	1	0	0	8
Meaniag of Non-co operation, by C. F. Andrews ...	0	12	0	4
Ethics of Destruction, by Mabatma Gandhi ...	0	12	0	4
Key to Yerrowada, by M. Mahomed Ali ...	0	8	0	4
Our Educational Problem, by Lala Har Dayal, M. A. ...	1	8	0	12
Soul of India, by B.C. Pal	1	8	0	12
Advance India and Issue in India by B Hougton I.C.S.	0	8	0	4
C. D Report (Few copies only left, ...	1	0	0	4
Development of Democracy in India K Rajeswara Row.	2	0	1	0
Non-co-operation in other, lands by Fenner Brockway	1	0	0	8
India and its Government, by Fenner Brockway ...	0	8	0	4
Dyarchy and after, by C. R. Readdy, M.A. ...	0	4	0	2
Charka, with an introduction. by Sir P. C. Roy ...	0	4	0	2
The Science of Sex by an M. D. ...	2	0	1	0
Faded Flower, by K. Rajagopal ...	1	0	0	8
Imperialism, by K. M. Panikar, M. A. ...	1	0	0	8
The New Russia, by & W Postgate ...	0	12	0	6
Premanand and Pushpavati, by Namonarayana ...	0	8	0	4
A passing Phase of politics, by N. C. Kelkar M.L. A. ...	1	4	0	10
Leprosy in India, by T. S. Krishnamurthy Iyer ...	0	8	0	4
India and the Empire, by E. Carpenter ...	0	4	0	2
The Resurrection of the Congress by D. N. Bannerjee ...	0	4	0	2
Christ of to-day, by Rev. Holmes ...	0	4	0	2

Note.—A further discount of 10 per cent will be given on orders of not less than 15 books from the above list at a time and this concession holds good till the end of December 1929.

B. G. Paul & Co.,
Publishers, G. T. Madras.

கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

பாலகாண்டம் ... ... ரூ	5	0
அயோத்தியாகாண்டம் ...	5	0
ஆரணியகாண்டம்	4	0
கிட்கிந்தாகாண்டம் ...	4	8
சுந்தரகாண்டம்	5	0

இவ்வகை உரைகளுடன் கூடிய
அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு,
புரசைவாக்கம், சென்னை.

Our Publications.

Kamban's Kosala.

By T. N Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.
கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.
கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணா 4.

உலக அதியசம். விலை அணா 4.

விசித்திர விளக்கு
எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணா 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணா 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4

The Educational Publishing Co.,
Nungambakam, Madras.

வர்த்தமானம்

மன்னர்பிரான் உடல்நிலை:—மன்னர் பிரானின் வலதுபக்கத்து மார்பில் கொப்பளங்கள் ஏற்பட்டுள்ளதால், மறுபடியும் ஆபரேஷன் செய்யவேண்டுமென்று அரசகுடும்ப டாக்டர்கள் ஆறுபேர் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். என்று ஜூலை 13-ந் தேதி லண்டன் செய்தி கூறுகின்றது.

* * *

பர்சியாவில் வெள்ளம்:—பர்சியாவிலுள்ள டெப்ரிசியில் என்னுமிடத்தில் கனத்த மழைபெய்ய அதனால் பெரியவெள்ளம் ஏற்பட்டுவிட்டது. உயிர்ச்சேதம் அதிகமாம். தெஹ்ரான் என்னுமிடத்தில் வெள்ளத்தால் 375 பேர் மாண்டனர் என்று தெரிகின்றது. 2000 வீடுகள் இடிந்துவிட்டன, என்று ஒரு தந்திச் செய்தி கூறுகின்றது.

* * *

அன்னபூர்ணையா கைதியானார்:—இராஜமகேந்தரம் ஸ்ரீ அன்னபூர்ணையா அவர்கள், காங்கிரஸ் என்னும் ஆந்திரபாஷைப் பத்திரிகையில் சுதந்தர உணர்ச்சி யென்றொரு வியாஸம் எழுதியது இராஜத்துவேஷத்தை உண்டாக்கவல்லதெனப் பினல்கோட் 124-ஏ சட்டப்படி ராஜமகேந்திரத்தில் கைது செய்யப்பட்டார் என்று தெரிகின்றது

* * *

லார்ட் இர்வின்:—'இந்திய இராஜப்பிரதிநிதி இன்னும் சிலகாலம் லண்டனில் தங்கியிருப்பார். இவர் யார்க்குஷையர் சென்று தமது தந்தையுடன் ஒருவாரம் தங்கிப் பின் லண்டன் வந்து இந்தியா ஆபீஸில் இருப்பார். சைமன்கமிஷன் அறிக்கை தயார்செய்யும் விஷயமாகத்தான் லார்ட் இர்வின் அழைக்கப்பட்டுள்ளார்.' என்று பத்திரிகைப் பிரதிநிதி அறிவிக்கிறார்.

* * *

இந்திய அரசியல் திருத்தம்:—சைமன் கமிஷன் அங்கத்தினர்களுக்கு ஒவ்வொரு மாகாண அரசாங்கத்தாரும், இந்திய அரசியல் திருத்த விஷயமாய்த் தங்கள் அபிப்பிராயத்தை அனுப்பியுள்ளனர். சென்னை அரசாங்கத்தாரும் தங்களுடைய சிபார்சுகளை அனுப்பியுள்ளனர். மற்ற மாகாண அரசாங்கங்களைவிடச் சென்னைக் கவர்ன்மெண்டார் முற்போக்கான சிபார்சுகளைச் செய்துள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

* * *

ராமராஜு ஜயந்தி:—ஸ்ரீ அல்லூரி ராம ராஜுவின் 33-வது பிறந்த தினம் ராஜமஹேந்திரத்தில் சென்றவாரம் கொண்டாடப்பட்டது. இக்கூட்டத்தில் ஸ்ரீ அன்னபூர்ணையா தலைமை வகித்தார். காந்தி அடிகள் இக்கூட்டத்திற்கு அனுப்பியசெய்தி:—'ஸ்ரீ ராமராஜுவின் பலாத்கார முறையை நான் ஏற்றுக்கொள்ள முடியாதெனினும், அவரது, வீரத்தையும், அஞ்சாநெஞ்சத்தையும், தேசபக்தியையும் பாராட்டாதிருக்க முடியாது' ராமராஜு வீரதீரச் செயல்களைப்பற்றிப் பலர்பேசக் கூட்டம் முடிவுற்றது.

* * *

கார்ப்போரேஷன்தேர்தல்:—இவ்வருஷம் கார்ப்பொரேஷனில் ஏற்படும் காலிஸ்தானத்திற்குக் காங்கிரஸ் அபேக்ஷகர்களை நிறுத்துவதுபற்றி ஆலோசிக்க ஸ்ரீமான் எஸ் சத்தியமூர்த்தி ஐயர் தலைமையில் சென்றவாரம் சனிக்கிழமைபன்று மஹாஜனசபை மண்டபத்தில் ஒருகூட்டம் நடைபெற்றது. கடைசியில் துறைமுக டிவிஷனுக்கு ஜனாப் பாஷீர் அமத்தையும், திருவல்லிக்கேணிக்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி ஐயரையும், அம்மன்கோவில் டிவிஷனிற்கு வி. எல். சாஸ்திரியையும், ராயப்பேட்டைக்கு ஸ்ரீ பாணிராவ் என்பவரையும் நிறுத்துவதென்று தீர்மானித்தனர். மீர்சாப்பேட்டை, அமீர்மால் நுங்கம்பாக்கம் டிவிஷன்களுக்கு இன்னும் அபேக்ஷகர்கள் நிர்ணயிக்கப்படவில்லை. இவ்விஷயம் அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

* * *

ஆப்பிரிக்கா இந்தியர் முயற்சி:—தென் ஆப்பிரிக்கா இந்தியக் காங்கிரஸ் கமிட்டியார் அங்கிருக்கும் இந்தியர் குறைகளை இந்தியாவில் பிரசாரம் செய்யவும், இந்திய அரசாங்கத்தாரிடம் முறையிட்டுக் கொள்ளவும், பிரசாரக் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்கள் அக்கமிட்டியார் சீக்கிரம் இந்தியா வருவர் என்று தெரிகின்றது

* * *

லஜபதிராய்க்கு நியாபகச்சின்னம்:—காலஞ்சென்ற ஸ்ரீலஜபதிராயின் ஞாபகச்சின்னக் கமிட்டியார் அவரது உருவச்சிலை ஒன்றை வெண்கலத்தில் அமைக்க ஏற்பாடு செய்தனர். சிலையும் அனேகமாய் வேலைபாய் விட்டதென்று தெரிகின்றது. இதைச் செய்பவர் குவாலியரில் இருக்கும் ஒரு சிற்பி. இவ்வருடக் காங்கிரஸ் வாரத்தில் சிலை ஸ்தாபிக்கப்படும் என்று மேற்படி சிலைக்கமிட்டியார் கூறுகின்றனர்.

* * *

ராவ்பகதூர் S. Rm. C T. சபாரத்னம் செட்டியார்:— கானாடுகாத்தான் ராவ்பகதூர் S.Rm C.T. சபாரத்னம் செட்டியார் அவர்கள் ராவ்பகதூர் பட்டம் பெற்றதை ஒட்டிக் கானாடுகாத்தான் தனவைசியப் பிரமுகர்கள் அவருக்கு ஒரு உபசாரம் நடத்தினர். ராஜா ஸர். அண்ணாமலைச்செட்டியாரும், மற்றுபிரமுகர்களும் இவ்வுபசாரக்கூட்டத்திற்கு வந்திருந்து, ராவ்பகதூர் செட்டியார் அவர்கள் சிறந்த குணத்தையும், தர்ம சிந்தனையையும், அப்பட்டம் பெற அன்னவர்க்கான தகுதியையும் பாராட்டினர்.

* * *

பிராஞ்சிபேயின் மறுப்பு:—பம்பாய் வாசியான டாக்டர் பிராஞ்சிபே இப்பொழுது லண்டனில் இருந்து வருகின்றார். சைமன் கமிஷன் அங்கத்தினர் இங்கிலாந்திலிருக்கும் சில இந்தியப்பிரமுகர்களை இந்திய அரசியல் விஷயமாய் யோசனை கேட்க அழைத்தனர். டாக்டர் பிராஞ்சி தாம் லிபரல் கட்சியினர் என்றும், தமது கட்சி சைமன் கமிஷனைப் பகிஷ்கரித்திருப்பதால் தாம் கூட்டுறவு கொடுக்க முடியாதென்றும் கூறிவிட்டார். சைமன் கமிஷன் அங்கத்தினர் வைத்தவிருந்திற்குட் டாக்டர்பிராஞ்சிபி போயிருந்ததைப் பற்றி ஒரு பத்திரிகை நிருபர் அவரைக்கேட்க, சினேகிதமுறையில் சென்றதாகக் கூறினார்.

* * *

பார்லிமெண்டில் இந்தியா:—பிரிட்டிஷ் வர்த்தக வளர்ச்சியின்பொருட்டு வியாபாரப் பாதுகாப்பு வேண்டுமென்று கன்ஸர்வெடிவ் கட்சியார் கொண்டுவந்த பிரேரணையின்மேல் தொழிற் கட்சியினரான பிலிப்ஸ்னோடன்கூறியதாவது:—"பிரிட்டிஷ் வர்த்தக வளர்ச்சிக்கெனப் பாதுகாப்புச் செய்தல் இந்தியா போன்ற ஏகாதிபத்தியநாட்டுக்கும்நமக்கும்நெருங்கிய வியாபார சம்பந்தம் ஏற்படுவதற்குத் தடையாயிருக்கும். நம் நாட்டைப்போல் பிறநாட்டின் செல்வவளர்ச்சியையும் நாம் கவனிக்கவேண்டுவது அவசியமாகும். சிறப்பாய்த் தொழிற்கட்சியார் இந்திய விவசாய முன்னேற்றத்திற்கான முயற்சி செய்யப்போகின்றனர். விவசாயத்தையே இந்தியர் முக்கியமான தொழிலாகக் கொண்டுள்ளார். விவசாயிகளுக்குத் தற்கால விவசாய முறையைப் போதித்து அதிகமான சாகுபடி செய்வதற்கு வழிகாட்டவேண்டும். இந்திய விவசாயிகளுக்கு இரும்புக்கலப்பையையும்,மோட்டார் கலப்பையையும் கைபாளக் கற்பித்து, அச்சாமான்களையும் கடனாக அவர்களுக்குக்கொடுத்து மாசூல் காலத்தில் விலையைச் சிறிது சிறிதாக வசூலிக்கவேண்டும். இவ்வண்ணம் வேலைசெய்தால் இந்தியாவில் விவசாய முன்னேற்றம் ஏற்படும். இதுபற்றிவேண்டுவதுசெய்ய கமிட்டி ஒன்றும் சீக்கிரத்தில் ஏற்படுத்தப்படும்."

KALANILAYAM.
REG. NO. M. 2324.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET,

Purasawalkam MADRAS.

189063
189083

1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A. B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஓதற்பிரவு வரை—K. இராமரத்னம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் கிஷேன் எபிகூரன் ஜினோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலகிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஓயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தனார் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுனூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

நாலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம்—தபால் சேலவு உள்பட:—				
	பையின்டு செய்யாதது	உள்நாடு ரூ 8—0—0	வெளிநாடு	ரூ 9—8—0
	ஆப்லெதர் கில்டுபயிண்டு	உள்நாடு ரூ 10—0—0	வெளிநாடு	ரூ 11—8—0
	காலிகோ பயிண்டு	உள்நாடு ரூ 9—8—0	வெளிநாடு	ரூ 11—0—0

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. F. Kumariah, B.A., B.L. (Editor)